இம்முறை ஈதுல் பித்ர் கொண்டாட்டங்கள் மிகவும் விசேஷமாக இருக்கும் என்று இப்பள்ளிவாசல் இமாம் கூறினார். இதற்குக் காரணம் பெரிஸ்த்ரோயிகாவைத் தொடர்ந்து கூடுதலான பள்ளிவாசல்கள் விசுவாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டதே யாகும்.

பெரியவர்கள் இத் தினத்தில் சிறுபிள்ளைகளுக்குப் பரிசுகளையும் பணத்தையும் சந்தோஷமாக வழங்குவர்.

இக்கொண்டாட்டம் மூன்று நாளைக்குக் கொண்டாடப்படும். புலோவ், சூர்பா, சஷ்லீக், காஸீப் தும்ஸா ஆகிய உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு பரிமாறப்படும்.

மாஸ்கோவில் ஏற்கனவே ஒரு ... (பள்ளிவாயில்)

மாஸ்கோவில் இன்று 250,000 தாத்தாரிய, உஸ்பெக் ஏனைய கிழக்குலக மக்கள் உள்ளனர். இவர்களில் அநேகமானோர் இஸ்லாமியர்.

பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்களும், தூதுக் குழுவினரும் மாஸ்கோவுக்கு விஜயம் செய்கின்றனர். சோவியத் யூனியனின் ஏனைய குடியரசுகளில் இருந்தும் முஸ்லிம்கள் மாஸ்கோவுக்கு அடிக்கடி விஜயம் செய்கின்றனர். எனவே இன்னுமொரு பள்ளிவாசல் இங்கு அவசியமானது என கமாலுத்தீன் தெரிவித்தார்.

தாத்தாரியர்கள் பெரும்பான்மையாக வாழும் மாஸ்கோவின் மத்திய பகுதியில் இந்த பள்ளிவாசல் அமைகிறது. இங்கு அரபு மொழி போதிக்கும் மத்ரஸா ஒன்றும் இயங்கும், பிரசுராலயம் ஒன்றும் இங்கு இயங்கும்.

உஸ்பெக் மொழியில் 200,000 திருக்குர்ஆன் பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்படும். உஸ்பெக் விஞ்ஞானப் பேரவை இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

பேராசிரியர் இஸ்மதுல்லாஹ் அப்துல்லாயேவ் புனித குர்ஆனை அரபியிலிருந்து உஸ்பெக்கிற்கு மொழிபெயர்த்து வருகிறார்.

தாஷ்கந்தில் உள்ள இமாம் புஹாரி மத்ரஸா மொழிபெயர்ப்பில் பேராசிரியருக்கு உதவும், சரித்திர, புவியியல், இலக்கிய விளக்கங்களுடன் புனித குர்ஆன் வெளிவரும்.

(ம)

---

உமறுப் புலவரின் சீறாப் புராணத்தின் நிகழ்களம் அரேபிய நாடாகும்.

அரேபியா என்றவுடன் எமது மனத்திரையிலே தோற்றுவது ஓர் அரும்பாலைவனம் தான். பார்க்கும் இடமெல்லாம் மணல் செறிந்த, கரடு முரடான, கற்பாங்கான நிலப்பரப்புகள் வெப்பம் மிக்க இந் நிலத்தை உமறுப் புலவர் ஓர் எழில்மிகும் சோலையாகச் சித்திரிக்கிறார். பசுமை மிக்க தாவர வர்க்கங்கள் அருகிய பாலை நிலத்தைச் செழிப்பு மிக்க பிரதேசமாகப் புலவர் வர்ணிக்கிறார்.

உமறுப் புலவர் வளங்கொழிக்கும் தமிழ் நாட்டவர். தமிழ் இலக்கியங்களிலே திளைத்தவர். எனவே அவர் கானல் மலிந்த கள்ளி செறிந்த பாலையை முற்றிலும் வேறான கண்களால் நோக்குகிறார்.

இனி அவர் கூறும் அரேபிய நாட்டினைக் காண்போம்.

பிரமாண்டமான பொருட்களைப் பற்றிக் கூறும் போது நாம் கடல் போன்றது, மலை போன்றது என்றெல்லாம் சாதாரணமாக உவமை கூறுவது வழக்கம். இங்கு உமறுப் புலவர் தம் பாடலிலே கூற வந்தது ஆகாயத்திலே பரந்து கிடக்கும் வெண் மேகங்களைப் பற்றியாகும்.

அவை வானை நிறைத்து நிற்கின்றன. சாதாரண பொருட்களால் அவற்றுக்கு உவமை கூறுதல் சாத்தியமன்று எனவே பரப்பினைப் பற்றி எவரும் சந்தேகங் கொள்ள முடியாத ஒரு பொருளை அவர் உவமைக்கு எடுத்துக் கொள்கிறார். அதுவே எமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழாகும்.

அந்தப் புகழ் பாரெங்கும் எங்ஙனம் நிறைந்துள்ளதோ, அதே போன்று வெண்மேகங்கள் வானெங்கும் நிறைந்து காணப்படுகின்றன என்று கூறுகிறார். இத்தகைய வெண் மேகங்கள் ஓசை மிக்க கடல் மீது இறங்கி நீரைப்பருகித் தமது நிறத்திலே மாற்றம் கொள்கின்றன. சூழ் கொண்ட மேகங்களின் கருமை கூறுமிடத்து கருங் கடலே எழுந்து சென்றது போலிருந்தாகப் புலவர் கூறுகிறார் பாடலிலே—

"தருங் கொடை நயினார்
கீர்த்தி
தண்டோர்
கருங்கட லெழுந்த தென்னக்
ககனிடை செறிந்த மீண்ட


(தருங்கொடை — ஈகையைத் தரும்; நயினார் — மேலோர்

## எஸ். எம். கமால்தீன்

சகமெலாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பி லண்ட
முகடுற நிறைந்த வேபோல்
இருங்கண வெள்ளை மேக
மிரை பசுங் கடல் வீழ்ந்

விசும்பு — ஆகாயம், முகடு — உச்சி, ககன் — ஆகாயம்).

வெண்ணிற மேகம், பசுங் கடல் மீதிறங்கி நீரைப் பருகு



உமறுப் புலவர் சீறாவை இயற்றுவதில் தமிழில் தோற்றியுள்ள பிற காப்பியங்களை பின்பற்றிப் பல இடங்களில் பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வகையில் நாட்டுப் படலத்தில் சில சிறப்புமிக்க உதாரணங்களை நாம் காணலாம்.

மேலே நாம் குறிப்பிட்ட பாடலிலே வெண் மேகங்கள் கடல் நீரைப் பருகி கருமை நிறம் பெற்றதைக் கம்பர் தம் இராமாயணத்திலே,

"நீறணிந்த கடவுள்
நிறத்தவான்
ஆறணிந்து சென்று ஆர்கலி
மேய்ந்து அகில்
சேறணிந்த முலைத்திருமங்கை
தன்
வீரணிந்தவன் மேனியின்
மீண்டதே"

என்று வெண்ணிற விபூதியை அணிந்த சிவபெருமானின் நிறத்த வெண்மேகம் கடலில் மேய்ந்து கருநிறக் கார்மேகமாய்த் திரும்புவதைக் கம்பர் உவமையோடிணைத்துக் கூறுகிறார்.

பெருமளவில் இடையறாது பெய்யும் மழை தோற்றுவிக்கும் ஆற்று வெள்ளம் தன் போக்கில் ஏற்படுத்திச் செல்லும் சேதத்தை எடுத்துக் கூறும் உமறுப் புலவர், அந்த ஆற்றின் செயலை ஒரு விலை மகளின் செயலுக்கு உவமித்துக் கூறும் அழகிய பாங்கினைக் காண்போம்.

மலையெனு மரசன்
புயங்களைத் தழுவி
மகிழ்ச்சிசெய் தவனுழைச்
சிறந்த
நிலைகெழு பொன்னு
முரகசெம் மணியு
நித்தில ராசியுங் கவர்ந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை நிற நாவல் பழங்கள்

கருநீல நாவல் பழங்களைத் தான் நாம சாதாரணமாகப் பார்க்க முடிகிறது, வெள்ளை நாவல் பழங்கள் மிகவும அபூர்வமானவை,

வெள்ளை நிற நாவல்பழம, சென்னை கிண்டி தேசியப் பூங்காவில், "போலோ" மைதானத்தில் உள்ள ஒரு நாவல் மரத்தில் காய்க்கிறது, வருடத்தில் மூன்று மாதம் மட்டும இந்த வெள்ளை நாவல் பழங்கள் அந்த மரத்தில் கொத்துக் கொத்தாகக் காய்க்கின்றன, வெள்ளை நாவல்பழம, கருநீல நாவல் பழங்களைவிடச் சுவையாக உள்ளது,

போலோ மைதானத்தில் நான்கு வகையான நாவல் பழ மரங்கள் உள்ளன, ஆனால் வெள்ளை நாவல்பழம ஒரு மரத்தில் தான் கிடைக்கிறது,

பொதுவாக மான், சிஙகம, புலி, முதலை, ஆஸ்திரேலியாவில் வசிக்கும "கோலா" என்னும கரடி இவைகள் தான் அபூர்வமாக வெள்ளை நிறத்தில் பிறக்கும, நாவல் பழம வெள்ளையாகத் தோற்றமளிப்பது இது வரை எஙகும காணப்படாத அதிசயம,

போலோ மைதானத்தில் குரங்குகள் நிறைய இருக்கின்றன, நாவல்பழ சீசன் ஆரமபமானவுடன் அங்குள்ள எல்லா நாவல் மரத்திலும அந்தக் குறுமபுக்காரக் குரங்குகள் ஏறி அமர்ந்து கொண்டு கிளையைப் பலமாக உலுக்கும, அதிலிருந்து ஏராளமான நாவல்பழங்கள் உதிர்ந்து விழும,

உதிர்ந்து கிடக்கிற பழங்களைத் தின்னுவதற்காகத் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவரும பல புள்ளி மான்கள், அவைகள் கருநீல நாவல் பழங்களை விட வெள்ளை நாவல் பழங்களைத் தான் பிரியமாகச் சாப்பிடுகின்றன,

கிண்டி தேசியப் பூஙகாவில் வெள்ளை நாவல் மரம ஒன்று தான் இருக்கிறது, வன அதிகாரிகள் வெள்ளை நாவல் கொட்டைகளைச் சேகரித்து நாற்றஙகாலில் போட்டு செடி உற்பத்தி செய்கிறார்கள், இதன் மூலம தமிழகம முழுவதும வெள்ளை நாவல் மரம் தோன்ற வாய்ப்பிருக்கிறது

(ம—10)

தண்ணீர் வளம் குன்றிய நாடுகளில்

# கழிவு நீர் மறுபிறப்பு எடுத்து உணவு உற்பத்திக்கு உதவலாம்

## பேரு நாட்டில் பரிசோதனை வெற்றி

அபிவிருத்தி அடைந்த வரும நாடுகளில் வேகமாக நகர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன- அதேநேரம அங்கே பிரச்சினைகளும முளைத்துக் கொண்டிருக்கின்றன- இவற்றுள் ஒன்றுதான் பக்குவமாகவும மலிவாகவும மனிதக் கழிவுகளையும தொழிற்சாலைக் கழிவுகளையும அப்புறப்படுத்தல்-

நகர ஏழைகள் நன்னீர் இல்லாமல் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுகிறார்கள்- இதனால் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரில் காய்கறிகளை வளர்க்கிறார்கள் இது பாரதூரமான ஆரோக்கியத் தாக்கங்களுக்குக் காரணமாகி விடுகின்றது-


அதிர்ச்சி தரும அளவுக்கு இம முறையில் கழிவு நீரைப் பாவிப்பது அபிவிருத்தி அடைந்து வரும நாடுகளே! இஙகெல்லாம சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் காய்கறித் தோட்டஙகளுக்கு 80 சதவீதம பிரயோகிக்கப்படுகிறது-

இத்தகைய அபாய நிலை நீர்ப் பஞ்சத்தால் அவதியுறும் பேரு நாட்டில் மிகவும மோசமாக கையாளப்படுகிறது- இந் நாட்டின் ஐந்து சதவீதமான கரையோரப் பகுதிகளிலேயே விவசாயத்திற்குப் போதுமான நன்னீர் உண்டு காய்கறி வளர்ப்புக்கோ கழிவு நீர் அபரிமிதமாகப் பாவிக்கப்படுகிறது-

இத்தகைய முறையில் உட்கொள்ளப்படும மரக்கறி வகைகளால் அடிக்கடி மூளைக் காய்ச்சல் தொற்றக் கூடிய ஈரல் வீக்கம போன்ற நோய்கள் உண்டாகின்றன- பேரு நாட்டில் உலகிலே உயர்ந்த வயிற்றோட்ட நோய்கள்பெருக்கெடுப்பதற்கு இதுவும ஒரு காரணமாக இருக்கலாம-

ஆனால் கழிவு நீரை சுத்திகரிக்கும பேருவின் முனைவுகள் பொருளாதாரத் தாக்கம இன்றி நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது- உலக நிதி ஸ்தாபனஙகளின் ஒத்துழைப்புடன் கழிவு நீருக்குப் புத்துயிர் கொடுப்பதால் அதை காய்கறி வகைகளுக்கும நன்னீர் மீன் வளர்ப்புக்கும பேரு பயன்படுத்துகிறது- இஙகே வெற்றி தரும விளைவை ஏனைய வளர்வுறும நாடுகளும எடுத்துச் செல்வதே உலக நிதி நிறுவனஙகளின் நோக்கஙகளில் ஒன்றாகும-

இச் சுத்திகரிப்புத் திட்டத்திற்காக லிமா என்னுமிடத்தில் இருந்து 210 கிலோ மீற்றர் தொலைவில் 21 கழிவு நீர்த் தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன- வெற்றில் கடந்த 25 வருடஙகளாக சான் புலான் நகரிலிருந்து பெருகி வரும கழிவு நீரைத் தேக்கி நன்னீர் மாற்றத்திற்குக் கொண்டு வருகிறார்கள்-



கழிவுநீர் மறுபிறப்பு எடுத்துவயல் நிலஙகளை வளம கொழிக்கச் செய்கிறது.

இத்திட்டத்தைச் செயற்படுத்த உலக நிதி நிறுவனஙகள் வைத்தியம பொறியியல் சுற்றாடல் சூழல்களில் வல்லமை வாய்ந்த நிபுணர்களை நாட்டின்புறத்தே திரட்டி லிமாவில் நிலைகொள்ள வைத்துள்ளன-

சான் புலானின் சனத்தொகை 150,000 ஆகும- இந் நகரில் இருந்து பெருகிச் செல்லும கழிவு நீர் வினாடிக்கு 360 லிற்றர் ஆகும- மேற்சொன்ன 21 கழிவு நீர்த்தேக்கஙகளும மலை நோக்கி மூன்று வகை உயரஙகளில் அமைக்கப்பட்டுள்ளன,

கழிவு நீர் கீழிறஙகி வரும் போது நன்னீராக மாறி வருகிறது- இது மட்டுமல்ல நீரில் மிதக்கும நீர்ப்பூண்டுகள் பரத்தியிருப்பதால் கழிவு நீரின் ஊத்தைகளை உண்ணும போது கதிரவன் ஒளியின் உதவியுடன் பிராணவாயுவை உற்பத்தி செய்கின்றன-

அடுத்ததாக கழிவு நீரில் தேஙகும சடப் பொருள்களில் ஒட்டுண்ணிகள் நோய்க் கிருமிகள் படிந்து அடியில் உறைந்து விடும- இமமுறைகளால் கழிவு நீர் பயிர்ச்செய்கைக்கு உகந்த புனித நீராகிறது-

நல்ல வேளையாக தேஙகியுள்ள கழிவு நீரில் அடைசல்கள் கொஞ்சமாகவே இருக்கின்றன- அவற்றை அகற்ற வேண்டிய அவசியம இல்லை- இல்லையேல் அதற்கென்றே ஏராளமான பணம செலவிட வேண்டி வரும-

ஒரு காலத்தில் சான் புலான் பாலை நிலத்தால் சூழப்பட்டிருந்தது- ஆனால் இன்றோ 1,500 ஹெக்டயர் நிலப் பரப்பில் அஙகே நீண்டுயர்ந்த மரஙகளை வாழைத் தோட்டஙகளை வற்றாளைத் தோட்டஙகளை காணக்கூடியதாக இருக்கிறது- இந்த வரிசையில் அடைசியாக நன்னீர் மீன் வளர்ப்பும சேர்ந்துள்ளது-

இன்மை கழிவு நீர் இறஙகி மூன்றாம படியை அடையும போது அந்நீர் நன்னீராகி உலக சுகாதார நிறுவனத்தின் நீர்ப் பாசனத் தரத்திற்கும இறால் வளர்ப்புப் போன்ற நன்னீர் மீன் நிலையஙகளுக்கும பொருத்தமானதாகவும ஆகிவிடுகிறது-

[ம—தி]

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்:திரு. ஆர்வி

[25—3—1990 தொடக்கம 31—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி பரணி கார்த்திகை 1ஆம கால்

மேஷம- வெளிவட்டாரப் பழக்கத்தால் புகழ் அதிகரிக்கும, [illegible]லவினஙகள் அதிகரித்தாலும சமாளித்துக் கொள்ளலாம. பிறர் பொருட்டு பண விரயமும வீண் அலைச்சலும ஏற்படும. வாரக் கடைசியில் கணவன் மனைவியிடையே சிறுமனக் கசப்பு ஏற்பட்டு நிவிர்த்தியாகும.

### சிங்கம்

மகம் பூரம உத்தரம 1ஆம கால்-

சிஙகம- தொழில், வியாபாரம முன்னேற்றமாக இருக்கும, நல்ல ஆதாயம கிடைக்கும, இனபந்துக்கள் உதவியாக இருப்பார்கள். பழைய முதலீடுகள் பலன் தரும, கோர்ட் விவகாரஙகள் தள்ளிப் போடப்படும. வாரக் கடைசியில் கூர் ஆயுதஙகளால் விபத்து ஏற்படலாம.

### தனு

மூலம பூராடம் உத்தராடம் 1ஆம் கால்-

தனு- தொழில் துறையில் முன்னைவிட நல்ல முன்னேற்றம காணப்படும. தொழிலைப் பலப்படுத்த பலருடைய ஒத்துழைப்பு தானாக வந்து சேரும, அதை நல்ல முறையில் பயன்படுத்தினால் நிறைய ஆதாயம பெறலாம, வாரக் கடைசியில் திடீர்ப் பிரயாணம ஒன்றுக்கு இடமுண்டு,

### ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்- ரோகிணி - மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்-

ரிஷபம- குடும்ப நலம நன்

### கன்னி

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்- அத்தம் சித்திரை 1 ஆம கால்கள்-

கன்னி- பெரிய மனிதர்கள்

### மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்- திருவோணம் - அவிட்டம 1 - 2ஆம் கால்கள்-

மகரம- பொருள் வசதி

சிந்தாமணி எண் சோதிடம்
NUMEROLOGY

உலகில்

சிறந்த, வைன் எது?

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்– ரோகிணி – மிருகசிரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்–

ரிஷபம்– குடும்ப நலம நன்றாக இருக்கும. தாமபத்திய வாழ்க்கையில் ஒற்றுமை நிலவும, கோர்ட் வழக்குகள் தள்ளிப் போடப்படும. நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பிரயாணம கைகூடும, நண்பர்கள் உதவி செய்வார்கள். வாரக் கடைசியில் தேகாரோக்கியம சிறிது பாதிப்படையும.

## மிதுனம்

புனர்பூசம 4ஆம் கால்– பூசம் ஆயிலியம்–

மிதுனம்– இவ்வாரம இவர்களின் உடல் நிலை சிறிது பாதிப்படையும, அதனால் வைத்தியச் செலவு சிறிது தலைதூக்கி நிற்கும. புகழ் கௌரவம, எதுவும பாதிக்கப்பட மாட்டாது, வீட்டுப் பிரச்சினைகள் ஓரளவு குறையும, அயலவர்கள் உதவியாக இருப்பார்கள்.

## கடகம்

மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால்கள்– திருவாதிரை – புனர்பூசம 1 2 3ஆம கால்கள்–

கடகம– வெளிவட்டாரப் பழக்கத்தால் புகழ் அதிகரிக்கும. செலவினங்கள் ஏற்படும, எதிர்பாராத செலவுகளால் கடன்பட நேரிடலாம கொடுக்கல் வாங்கலில் நாணயம தினறும, இனசன உதவி கிடைக்கும, வீட்டில் ஒரு சுபகாரியம நிகழும,

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்– அத்தம் சித்திரை 1 ஆம கால்கள்–

கன்னி– பெரிய மனிதர்கள் நட்பால் கௌரவம நிலைத்துக் காணும உத்தியோகத்தில் சிலசில மாற்றங்கள் காணப்படும, பொருளாதார வசதி குறையும, அடிக்கடி பணத்தட்டுப்பாடு ஏற்படும, குடும்ப வாழ்க்கையில் வீண் சண்டைகள் ஏற்படும, பெண்களால் தொல்லைகள் உண்டு.

## துலாம்

விசாகம 4ஆம கால்– அனுஷம கேட்டை–

துலாம– கௌரவம, புகழ், நன்றாக இருக்கும, ஆனால் சமூக சேவையில் பலருடைய எதிர்ப்பு வந்து சேரும, பூமி, பொருள் விற்பனை முயற்சி பலிதம தராது, வாகனங்களால் சிறிது விரயம உண்டாகும, காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும.

## விருச்சிகம்

சித்திரை 3 4ஆம் கால்கள்– சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்–

விருச்சிகம– எதிர்பார்க்கும இனங்கள் ஏமாற்றத்தைத் தரும, நமபியிருந்தவர்கள் கையை விரித்து விடுவார்கள், ஆலய தரிசனம, ஸ்தலயாத்திரை போன்றவற்றை செய்யநேரிடும, காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும, அயலவருடன் சிறுசிறு தகராறுகள் ஏற்படலாம.

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்– திருவோணம் – அவிட்டம 1 – 2ஆம் கால்கள்–

மகரம– பொருள் வசதி போதியளவு இருக்கும, கொடுக்கல் வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும, நண்பர்கள் சிலர் மறைமுகமாக எதிர்ப்பைக் காட்டினாலும அதனால் பெரும பாதிப்பு ஒன்றும ஏற்படாது; குடும்பப் போக்குவரத்து அனுகூலமாகும, குடும்ப நலம நன்று,

## கும்பம்

பூரட்டாதி 4 ஆம கால்– உத்திரட்டாதி – ரேவதி–

கும்பம– தொழில், வியாபாரம நல்லபடியாக நடைபெறும, தேங்கியிருந்த சரக்குகளுக்கு நல்ல கிராக்கி ஏற்படும, அதனால் அதிக இலாபத்தைப் பெறலாம, திட்டமிட்ட பிரயாணம தடைப்படும, கால்நடைகள் வைத்திருப்போர் கவலைப்படுவார்கள், குடும்ப நலம நன்றாக இருக்கும.

## மீனம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்– சதயம – பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்–

மீனம– தொழில்துறையில் முன்னேற்றம காணப்படும, உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு கிடைத்து வேலைப் பளு குறையும, வருமானம அதிகரிக்கும, பொருள் வசதி போதியளவு இருந்து வரும, குடும்ப வாழ்க்கை வசதியுடன் இருக்கும, இனசன உதவி உண்டு,

# சிந்தாமணி எண் சோதிடம்

## NUMEROLOGY

[25—3—1990 தொடக்கம் 31—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### 1

1, 10, 19, 28 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பொருள் வரவு, வீண் அலைச்சல், அரசாங்கத் தண்டம, அயலவர்களின் பகை, வெளிநாட்டிலிருந்து மகிழ்ச்சியான செய்தி, யோசனை மிகுதி–

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு, வியாழன், சனி–

### 2

2, 11, 20,, 29 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

வியாபாரத்தில் அதிக இலாபம– புகழ், இலட்சுமீகரம, மேலதிகாரியின் பாராட்டு, பிள்ளைகளால் கவலை– ஆடம்பரச் செலவு அதிகரிப்பு–

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு, புதன், சனி–

### 3

3, 12, 21 30 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பெண்களினால் மகிழ்ச்சி, அதிக வருமானம, கோர்ட் வழக்குகளில் வெற்றி, வாகனத்தால் செலவு, அயலவரால் பிரச்சினை உருவாதல்–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

### 4

4 13 22 31 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

வாக்கு வசீகரம, புத்தித் திறமை, குடும்ப மனஸ்தாபங்கள் தீர்தல், திருமணப் பேச்சுக்கள். எதிர்பாராத வகையில் பிரயாணம, கலைஞர்களுக்குப் புகழ்–

அதிஷ்ட நாட்கள்; புதன், வியாழன்–

### 5

5, 14, 23 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

வியாபாரத்தில் அபிவிருத்தி, எதிர்பாராத செலவுகள், கல்வியில் பாதிப்பு, மனச்சஞ்சலம, பிள்ளைகளால் கவலை– பண வரவு, நண்பர்கள் உதவி–

அதிஷ்ட நாட்கள்– புதன், வெள்ளி–

### 6

6 15, 24 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

காரிய தாமதம, மேலதிகாரியின் வெறுப்பு– பொருட் செலவு, சுபகாரியங்களில் ஈடுபடல், புனர் நட்பு– காதல் விவகாரங்களில் மகிழ்ச்சி–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

### 7

7, 16, 25 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

சூரியானுகூலம, பண வரவு வாக்கு வன்மை, பதவி உயர்வு, இனசன விரோதம, எதிர்பாராத செலவு, பிள்ளைகளால் மகிழ்ச்சி–

அதிஷ்ட நாட்கள்; ஞாயிறு வியாழன்–

### 8

8, 17, 26 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

குடுமபானுகூலம, மனைவியால் மகிழ்ச்சி– காதலில் வெற்றி, பரிசுப் பொருட்கள் வரவு, கஷ்டமான பிரயாணம, நெருப்பினால் விபத்து–

அதிஷ்ட நாட்கள்– புதன், வெள்ளி–

### 9

9, 18, 27 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

ஆரோக்கிய அபிவிருத்தி, பொருளாதார வசதி பழைய பகை தீர்தல், நண்பர்களால் உதவி, கணவன், மனைவி இடையே அபிப்பிராயபேதம–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

## உலகில் சிறந்த வைன் எது?

சிறந்த வைன வேண்டுமானால் பிரெஞ்சு வைன் என்றுதான் கேட்க வேண்டும. எத்தனையோ நாடுகள் வைன்களை உற்பத்தி செய்தாலும், பிரெஞ்சு வைனை எவையுமே மிஞ்சுவதற்கில்லை.

ஏனெனில் இந் நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் உற்பத்தியாகும் திராட்சைப் பழங்கள் மத உற்பத்திக்கு மிகவும ஏற்றன.

இதே திராட்சைக் கொடிகளை வேறு நாடுகளில் வளர்க்கும் போது அவை ஏனோ தமது உயர் குணத்தையும், மணத்தையும் இழந்து விடுகின்றன,

பிரான்சைப் போலவே இத்தாலியும் திராட்சை மத உற்பத்திக்குப் பேர் போனது. வைனும் பல்வேறு திராட்சையை அடிப்படையாகக் கொண்ட மத வகைகளும் இத்தாலியில் உற்பத்தி செய்யப்படுகின்றன,

(ம–032)

## தீவு ஒன்று விற்பனைக்கு

ஸ்காட்லாண்டின் மேற்கு முனையை ஒட்டி ஜிஜி என்று ஒரு தீவு இருக்கிறது, 3400 ஏக்கர் மிகப் பெரிய பிரமாண்டமான தோட்டம,

19 ஆம நூற்றாண்டில் கட்டிய மாளிகை, 39 காட்டேஜ்கள் உள்ள ஹோட்டல் ஆறு விவசாயப் பண்ணைகள்.

விலை விவரம சொல்லுவதற்கு முன் வில்லங்கம இல்லாத சொத்து என்ற கியாரண்டி என்ற முக்கிய செய்தி, விலை 10 மில்லியன் டாலர்தான்.

(து–10)

## மணிக் கவிதை

### கதறுது நெஞ்சம்

கண்ணிலே மையும் தீட்டி
காலிலே வர்ணந் தீட்டி
சொண்டிலே சாயம் பூசி
சொறி பிடித்தலையும் எங்கள்
பெண்களின் கோலங் காணப்
பேதை நெஞ்சம் பதறுதே!

★ க்திர் தில்லைநாதன்
(கனடா)

### கட்டழகி!

அகத்தின் அழகதனை......
அப்படியே முகத்தில் காட்டும்
அவள் மீதா அபாண்டம்?
ஆயிரம் தான் சொன்னாலும்
அந்தக் களங்கமற்ற முகத்தில்
அப்பழுக்கற்ற குணம் தெரிகிறது!
அவள் இன்னும் கன்னிதான்
அழகிய கட்டழகே சாட்சி!

★ வஸந்தன்

### உள்ளத்திலவள்

எண்ணாத எண்ணமெல்லாம்
எந்தனது மனம் தினமும்
எந்திழை பற்றி எண்ணினாலும்
என்னால் வெறுக்க முடியவில்லை
ஏனென்றால் என் உள்ளமதில்
என்றும் அவள் வாழுகிறாள்!
ஏச்சுக்கள் பேச்சுக்கள்........
எது பற்றியும் கவலையில்லை!
எல்லாம் அவன் செயலென்றே
ஏகனிடம் மன்றாடுகிறாள்!

★ ஜோர்ஜ் ஏபிரஹாம

### வாழ்விலேற்றம்

எவரையும் எளிதில் நம்பி
ஏமாந்து விடுவதால் தான்
என் வாழ்வில் நான் இன்று
ஏளனத்துக்காளானேன்!
என்றாலும் இனியாவது......
எவரிடமும் நான் ஏமாறாமல்
ஏற்றமுடன் வாழ்ந்திடுவேன்!

★ ஜே பிரக்காஷ்

### ப(பு)ருவங்கள்

உன் பருவங்கள் கண்டு
என் புருவங்கள் அசைந்தன!
இசையின் ஜாலங்கள்...
இயம்புத மனக் கோலங்கள்!
காலங்கள் மாறினாலும்
காதல் என்றும் மாறிடாது!
கண்ணிரண்டும் தாழுவதால்
எண்ணத்தைக் கூறிவிடு!

★ ஆர் நாதன்

### கண் காவியம்!

## ஜீவகாருண்யம் பயன் தருகிறது

ஜீவகாருண்யம் மிக்க நபர்களின் தலையீட்டால் ஒரு லட்சத்து 53 ஆயிரம் நத்தைகள் காப்பாற்றப்பட்டன—

வடக்கு இங்கிலாந்தில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்த நத்தைகளை வெள்ளைப் பூண்டு கலந்த வெண்ணெய்யில் பொரித்து உணவாக உட்கொள்ள சிலர் திட்டமிட்டனர்—

ஆனால் விஷயத்தை முன் கூட்டியே தெரிந்து கொண்ட ஜீவகாருண்ய சங்கத்தினர் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கொப்பறைகளின் வாயிலுக்கே வந்து விட்ட நத்தைகளின் உயிர்களைக் காப்பாற்றி விட்டனர்—

டோக்கியோவிலும் கூட இரு தவளைகளின் உயிர் ஜீவகாருண்யம் மிக்கவர்களினால் சமீபத்தில் காப்பாற்றப்பட்டது— மிருகவதை, மிருகவதை எதிர்ப்பு என்ற இரு பிரிவுகளும் சதா கயிறிழுப்பில் ஈடுபட்டுள்ளன— அவ்வப்போது மிருக வதை எதிர்ப்பாளர்களுக்கு வெற்றி கிட்டுவதுண்டு—

(ம—032)



எண்ணத்தைக் கூறிவிடு!

★ ஆர் நாதன்

## கண் காவியம்!

வாழை கருகுதல் போல்
வாடுகின்ற ஏழைகள்
கண் கலங்கும நீராலே
காவியங்கள் பிறப்பதற்கு
காரணம விலை ஏற்றங்களே!

★ இராமர்

## கல்வியின் வெற்றி

தாய் சொல்லை மதித்த
கல்வியில் தினமும தரித்தேன்!
அள்ளிப் பருகினேன் கல்வியை
அடைந்தேன் பின்பு வெற்றியை!
மக்கள் என்னை மதித்திட
மாநிலத்தில் நான் திகழ்வேன்!

★ எஸ் எம அப்பாஸ்

## இதயப் பாதை!

நீ போகும பாதையிலே...
கல்லும முள்ளும இருந்தாலும
தீண்டாத உன்னை அவை!
அன்னம போல் உன் பவனி
என் இதயப் பாதையிலே!

★ எம எச் எம நைசர்

## உயிர்த்துடிப்பு!

உனை நினைக்கும போது
உள்ளத்தில் ஏற்படுது பூரிப்பு!
தாரக மந்திரம போல்
தினம உன் பெயர் உச்சரிப்பு!
வனப்புமிகு உன் வதனம
என் மனதை ஆக்கிரமிப்பு!
இன்னொருவன் கைகளிலே
தவழுது உன் மேனி மினுமினுப்பு!
இப்போதாவது கேட்கிறதா
எந்தனது உயிர்த் துடிப்பு!


★ ஜி சதீஷ்




# பேர்மா ஷாப் சுப்றீமோ

விண் வெளித் தொழில் நுட்பச் சிறப்புடன், தரத்தில் அதி உன்னதமான துருப் பிடிக்காத எஃகு உருக்கில், தன் பெயரைக் கூடப் பதிக்க முடியாத பளிங்குச் சுத்த மெருகு பளிச்சிடத் தயாரிக்கப்பட்ட சவர பிளேட் பேர்மா ஷாப் சுப்றீமோ! தேர்மோப்ளாஸ்திக் பொலிமர் என்னும் அடர்த்தியான மும்முனை விளிம்புக் கூர்மையுடன் சவரச் சொகுசின் உச்ச இன்பத்தைத் தரும் விதத்தில் உருவாக்கப்பட்ட அதன் நேர்த்தியைப் பரீட்சித்து அதன் சிறப்பைக் கண்டு அனுபவியுங்கள்!

PERMA-SHARP SUPREMO




ரூ- 14/75 விலையில் 5 பிளேட்டுகள் கொண்ட
அழகான எடுப்புறையில் கிடைக்கும
பிளேட் ஒன்றின் விலை ரூ- 2/95

பேர்மா ஷாப் சுப்றீமோ
சிறந்த சவரத்தின் புதிய சிகரம்.

இலங்கையில் சந்தைப்படுத்துவோர் : அங்ளோ - ஏஷியன் Anglo-Asian

RJA 9711

சவூதி—டுபாய்—அபுதாபி—குவைட்
— ஓமான் —

வெகு விரைவில் பயணம்

சவூதி:- வீட்டுப் பணிப்பெண்கள் ஒரு கிழமையில் இலவச பயணம் வயது எல்லை 30 — 40 இடையில்

★ ஹொஸ்பிடல் கிளீனர்ஸ் (பெண்)
— 30 வயதிற்கு மேல் —

குவைட் / டுபாய் / அபுதாபி / ஓமான்: பாஸ்போர்ட், 6 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 போஸ் கார்ட் அளவு புகைப்படத்துடன் நேரில் வரவும். வயது 22—35 க்கும் இடையில்

AMEEN ENTERPRISES
511—Prince of Wales Avenue
Colombo — 14.
—App AL 625/14/15/17/18/23

சவூதி அரேபியா
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
[5 நாட்களில் பயணம்]

சார்ஜா — அபுதாபி — டுபாய்
குவைட் — பஹ்ரேயின்
[21 நாட்களில் பயணம்]
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
★ டெய்லர்ஸ்

கடவுச்சீட்டு 6 படங்கள் சகிதம் நேரில் வரவும்
M. K. M. ENTERPRISE
12.D—Prince of Wales Avenue
Colombo — 14
Labour & Approval 596/11/89

மத்திய கிழக்கு நாடுகளில்

# ராமராவின் புத்தர் சிலை ஏரியில் மூழ்கியது!

ஏரியில் மூழ்கிய புத்தர் சிலையை மீட்க பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

கர்நாடக மாநிலம் சரவண பெலகோலாவில் உள்ள கோம தேசாவர சிலைதான் உலகிலேயே உயரமான சிலை என்று கருதப்பட்டது!

இதன் உயரம் 17 மீட்டர்! அதை விட உயரமாக புத்தர் சிலை ஒன்று 23 மீட்டர் உயரத்தில் ஆந்திராவில் செய்யப்பட்டது. இந்த புத்தர் சிலையை ஐதராபாத்தில் உள்ள உசேன்சாகர் ஏரியின் மத்தியில் உள்ள ஜிப்ரால்டர் பாறையில் நிறுவ முடிவு செய்யப்பட்டது!

என் டி ராமராவ் முதல் மந்திரியாக இருந்த போது இதற்கான திட்டத்தை அவர் தீட்டினார்!

350 டன் எடையுள்ள அந்தப் பிரமாண்ட புத்தர் சிலையை "ஜிப்ரால்டர்" பாறையில் நிறுவுவதற்காக கொண்டு சென்றனர்!

பெரிய படகுடன் இணைக்கப்பட்ட "டிரெய்லரில்" சிலை வைக்கப்பட்டிருந்தது. டிரெய்லருடன் படகு நீரில் சென்று கொண்டிருந்த போது சிலையின் பளுவோடு (350 டன்) அதைக் கொண்டு செல்ல அமைக்கப்பட்டிருந்த ராட்சத இரும்புச் சட்டங்கள் (எடை 100 டன்) இரண்டுமாகச் சேர்ந்து பளு தாங்காமல் படகு நீரில் மூழ்க ஆரம்பித்தது!

கரையிலிருந்து படகு 100 மீட்டர் தூரம் சென்றதும் தண்ணீர் படகுக்குள் புக ஆரம்பித்தது! படகை திரும்ப கரைக்கே கொண்டு போய் விடும்படி சிலர் உடனே யோசனை கூறினர். ஆனால் படகிலிருந்து தண்ணீரை வெளியேற்றி விடலாம் ஆபத்து ஏதுமில்லை என்று மற்றவர்கள் கூறினார்கள். சற்று நேரத்தில் படகுக்குள் பெருமளவு தண்ணீர் புக ஆரம்பித்து விட்டது! இரும்புச் சட்டத்திற்கிடையே வைக்கப்பட்டிருந்த சிலை நழுவி தண்ணீருக்குள் விழுந்து விட்டது!

புத்தர் சிலையை நிறுவுவதற்காக அந்த டிரெய்லரில் 50 பேர் சென்றனர். அவர்களில் 8 பேர் சிலைக்கு அடியில் சிக்கி தண்ணீரில் மூழ்கினார்கள். 8 பேரும் மூச்சுத் திணறி இறந்தனர்!

மற்றவர்கள் நீச்சல் அடித்து கரைக்கு தப்பி வந்தனர். உடனடியாக அவர்கள் அங்குள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

முதல் மந்திரி சென்னாரெட்டி விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து வந்தார். "ஏரியில் மூழ்கிய புத்தர் சிலை மீட்கப்படும். ஜிப்ரால்டர் பாறையில் அந்தச் சிலையை நிறுவுவோம்" என்று சென்னாரெட்டி கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்— "இந்த விபத்து குறித்து ஐகோர்ட் நீதிபதி விசாரணை நடத்துவார்" என்றார்.

இந்த சிலை நிறுவப்படுவதில் ஆர்வமாக இருந்த என் டி ராமராவ் விபத்து பற்றி கேள்விப்பட்டதும் அதிர்ச்சி அடைந்தார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். "இந்த விபத்து துரதிஷ்டவசமானது. இதை மீட்க தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

உலகிலேயே மிகவும் பெரிய ஒரே கல்லினால் ஆன இந்த சிலை கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறுவதாக இருந்தது!

கருங்கல்லால் செதுக்கப்பட்ட இந்த சிலை ரூ 6 கோடி மதிப்புள்ளது! ஆந்திர மாநிலம் ராய்கிரி அருகே உள்ள கல்குவாரியில் கணபதி என்ற சிற்பியின் மேற்பார்வையில் இது வடிவமைக்கப்பட்டது.

கடந்த 10 வருடமாக 200 சிற்பிகளின் முயற்சியில் இது உருவானது!

[ம—10]



சைப்பிரஸ், லெபனான் ஆகிய நாடுகளில் இசை நிகழ்ச்சி நடத்திவிட்டு நாடு திரும்பிய பிரபல பாடகர் திரு வீ முத்தழகு புதிய தேசிய கலைப் பேரவையினால் கௌரவிக்கப்பட்டார். விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை பணிப்பாளர் திரு வீ ஏ திருஞானசுந்தரம் பாராட்டுரை வழங்கினார். திரு வீ முத்தழகு, திரு கே எஸ் சிவகுமாரன், திரு கணேசன் மனோகரன், திரு பி விக்கினேஸ்வரன், திரு ஏ இளஞ்செழியன் ஆகியோரும் படத்தில் காணப்படுகிறார்கள்.
(ம)

## மலையக மக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். சகல இன மக்களும் நன்மை அடைந்தார்கள்.

மலையக மக்களை பொறுத்த வரையில் இத் திட்டத்தினால் பயன் கிடைக்கவில்லை. இதற்கு மலையக மக்களுக்குப் பிரஜா உரிமை இல்லாதிருந்தமையே காரணமாகலாம்.

இப்போது மலையக மக்கள் இலங்கைப் பிரஜைகளாகி விட்டனர். அவர்களுக்கு சகல உரிமைகளும் கிடைக்க வேண்டும். அவர்களை இனி எவரும் புறக்கணித்து விட முடியாது.

இன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கு வீட்டு வசதி இன்றியமையாதது. இதனால் மலையக மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இப்படித் தலைவர் திரு தொண்டமான் ஜனாதிபதி முன்னிலையில் பகிரங்கமாகக் கோரிக்கை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

[ண—மு]

## சமாதான நீதிவான்



M R M Nuhuman

கம்பளை, கஹட்டப்பிட்டியைச் சேர்ந்த ஜனாப் எம் ஆர் எம் நுஹுமான் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார். இவர் கம்பளை மாவட்ட நீதிபதி திரு டட்லி குணரத்தின முன் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கம்பளை, கண்டி வீதியைச் சேர்ந்த அல்ஹாஜ் எம் எம் ரஹீட் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான இவர், கம்பளை சாஹிராக் கல்லூரி பழைய மாணவரும் இனமத பேதமற்ற சமூக சேவையாளருமாவார்.

வி இ 032986

## அரபுநாட்டு பாலைவனத்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைவிலாப் பண்ட
மணத்தையும் வாரிச்
சுருட்டியே யெல்லைவிட்
டகலும்
விலைமகள் போன்ற பலபல
முகமாய்
வெள்ளரு வித்திரன்
சாயும்.

(முரகசெம்மணி — சர்ப்பத்தின் சிவந்தமணி, நித்திலம் — முத்து புயங்கள் — தோள்கள்.)

மலையினின்றும் பாய்ந்தோடும் அருவிகள் அங்கு காணப்படும் செம்பட்டிக்க பொன்னையும், சிவந்த ... தனம், கரிய அகில், ஒளி வீசும் இரத்தினம் யானைக் கொம்புகள், முத்துக்கள், மாணிக்கம் முதலான திரவியங்களைப் பொதியுடன் கொண்டு கடலேறப் போகும் ஒரு வணிகனை அந்த அருவிக்கு ஒப்பிடுகிறார் உமறுப் புலவர்.

இதே கருத்தினை கம்பர் சரயூ நதியின் போக்கினைவிட்டுக் கூறுவதையும் காண்போம்.

மணியும் பொன்னும் மயிற்ற
லைப் பிலியு
மணியுமானை வெண்கோடு
மகிலுந்தன்
இணையிலா ரமும் இன்ன ...

யுதறிமெய் பதறிச்
செறிந்த சூழதரச் சொரிந்த
மைக் கனியையு ந்
தீண்டாள்.

(முதுகரம் — வண்டு, மைக்கனி — கருமையான பழம்)

இந்த மங்கையானவள் நாவற் பழமென மயங்கி ஒரு வண்டினைத் தீண்டிப் பதறிய காட்சியைக் கூறிய புலவர், மற்றுமொரு காட்சியில் ஒரு பெண் குரங்கின் பரிதாப நிலையை நயம்படச் சித்தரித்துள்ளார்.

மரக் கொப்புகளிலே உல்லாசமாகத் தாவித் திரிகிறது இந்தக் குரங்கு. அந்தச் சமயத் ...

சவூதி அரேபியா

## மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள்

### 3 நாட்களில் பிரயாணம்

வீட்டுப் பணிப்பெண்களாக சவூதி அரேபியா செல்ப வர்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்திற்கு கட்ட வேண்டிய 2700 ரூபா செலுத்த வசதியில்லாவிட்டால் அவர்களுக்கு கடன் வசதிகள் செய்து தரப்படும்.

| சவூதி அரேபியா | சம்பளம் |
| --- | --- |
| — வீட்டுப் பணிப்பெண்கள் | 400 ச றி |
| — வீட்டுச் சாரதிகள் (முஸ்லிம்) | 600 ச றி |
| — பணிப்பெண் / சாரதி (ஜோடி) | 1000 ச றி |

### 18 நாட்களில் பிரயாணம்

| யூ ஏ ஈ | |
| --- | --- |
| — வீட்டுப் பணிப்பெண் | 400–500 திராம்ஸ் |
| — பெண் சாரதிகள் | 200 யூ எஸ் டொலர் |
| — சாரதிகள் (கல்ப் லைசனுள்ளவர்கள்) | 850 திராம்ஸ் |
| **குவைட்** | |
| — வீட்டுப் பணிப்பெண்கள் | 30 கு தினார் |
| **பஹ்ரேயின்** | |
| — வீட்டுப் பணிப்பெண்கள் | 35 தினார் |
| — சாரதிகள் (கல்ப் லைசனுள்ளவர்கள் மட்டும்) | 60 தினார் |
| **ஓமான்** | |
| — வீட்டுப் பணிப்பெண்கள் | 45 ஓ தினார் |

## ஹர்ஜரன்

யூ ஜீ 101—102 பீபள்ஸ் பார்க்
சொப்பிங் கொம்பிளக்ஸ்
புறக்கோட்டை பிரத்தியேக பஸ் நிலையம் அருகில்
தொலைபேசி- 437769

எல்/600/4/90 — 600/9/90 — 600/1/90
எல்/600/8/90 — 600/10/90


சிறப்புமிக்க பொன்னையும், சிவந்த மணியையும், முத்துக்கள் முதலான பலவிலை மதிப்புள்ள பண்டங்களை எல்லாம் வாரிக் கொண்டு செல்வது மலையரசிய அரசனுடைய தோள்களைத் தழுவி அவனை மயக்கி அவனிடமுள்ள அரும் பொருட்களை எல்லாம் அபகரித்துக் கொண்டு செல்லும் ஒரு விலை மகளை ஒத்திருக்கும்.

உமறு தரும் இந்த அரிய உவமையை நாம் கம்பரது பாட்டிலும் காண்கிறோம்.

> தலையு மாகமும் தாளும் தழீஇ
> அதன்நிலை நிலாது இறை நின்றது போல்வே
> மலையினுள்ள வெலாம்
> கொண்டு மாண்டலால்
> விலையின் மாதரை யொத்
> ததவ் வெள்ளமே

என்பது கம்பரது பாட்டு.

இயற்கையின் எழில் கூறும் வகையில் ஒருமித்து உவமை கூறும் கம்பரும், உமறும் வெள்ளத்தின் போக்கினை விலை மகளுக்கொப்பிட்டது போலவே பிறிதோரிடத்தில் நதியின் செயலை ஒரு வணிகனுக்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். இதோ சீறாவில் நாம் சந்திக்கும் காட்சி.

> கிடந்த சந்தனங் காரகில்
> கிளைமணி கரிக்கோடு
> உடைந்த முத்தமவெண்
> டந்தமுச் சுடரொளி
> யொதுங்கக்
> கடந்த செம்மணிப் பையுடன்
> கொடுகட லேற
> நடந்த வாணிக னொத்தது
> செழுங்கழை நதியே.

(காரகில் – கரிய அகில், கரிக்கோடு – யானைத் தந்தம், முச்சுடரொளி – அக்கினி, சூரியன், சந்திரன் எனும் மூன்றினது ஒளி)

அருக் மலை வீழருவி ஒரு வணிகனையொத்திருக்கின்றது. சந்

> மகிலுந்தன்
> இணையிலா ரமும் இன்ன
> கொண்டேகலான்
> வணிக மாக்களை யொத்தவ்
> வாரியே.

சீறாவின் நாட்டுப் படலத்தை வாசகர்களுக்கு அறிமுகஞ் செய்யும் முகமாக மேலே நாம் வழங்கிய விளக்கத்தை முடிக்கு முன் புலவரின் கற்பனைத் திறன் கூறும் இரு காட்சிகளை கீழே தருகிறேன்.

மங்கையொருத்தி நாவல் மரமொன்றின் கீழ் பழம் பொறுக்கச் செல்கின்றாள். ஆனால் அங்கு தான் கையிலெடுத்த பழத்தை உடனே வீசி விடுகிறாள். அந்தப் பழம் நல்லதல்ல என்றெண்ணி செம்மையானதொரு பழத்தைப் பொறுக்குவதற்காகப் போலும். ஆம். இந்தத் தடவை அவள் பொறுக்கிய பழம் விசித்திரமானது.

நாவற் பழமென்று அவள் நினைத்துப் பொறுக்கியது ஒரு கருவண்டேயாகும்! அந்த வண்டோ வெருண்டு அவள் கையை விட்டும் பறந்தோடுகிறது. இதனை உணர்ந்த அவள் அச்சத்துடன் கையை உதறியவாறு அலறுகிறாள்.

அந்தப் பொல்லாத வண்டு தன்னை ஏமாற்றியது மட்டுமல்லாமல் மிகுந்த பயத்தையும் உண்டாக்கி விட்டது. இப்பயத்தின் விளைவாக அப்பேதைப் பெண் அங்கே நொந்துபோகச் சிதறிக் கிடக்கும் மற்ற நாவற்கனிகளை யும் தொடாமல் செயலற்று நிற்கிறாள். எங்கே மீண்டும் வண்டுகளைப் பொறுக்கியெடுக்க நேர்ந்து விடுமோ என அச்சத்தினால் இப்பாடலைக் கவனியுங்கள்.

> "மறிந்த காங்கிய நாவலின்
> கனியையோர் மங்கை
> எறிந்த பார்மகரதகினைக்
> காத்தினா லெடுப்ப
> பறிந்த போதலிற் றுணிக்
> கின்கை

...வாசமாகத் தாவித் திரிகிறது இந்தக் குரங்கு. அந்தச் சமயத்திலே அழகிய பலாப்பழமொன்று அதன் கண்களிலே பட்டு விடுகின்றது. குரங்கின் மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை. ஒரே பாய்ச்சலில் அந்தப் பழத்தின் மீது பாய்ந்து விடுகிறது அந்தக் குரங்கு.

ஆவலுடன் அந்தப் பழத்தை தனது பற்களினால் கடிக்க ஆரம்பித்து விடுகிறது. அந்தப் பழத்தின் நறுமணமும் தோற்றமுமே குரங்கின் அவாவைப் பெருக்கி விடுகின்றன. எனவே ஆர்வத்தோடு பழத்தின் மீது விழுந்து கடிக்கிறது. ஆனால் மறுகணம் விபரீதமொன்று நிகழ்ந்து விடுகிறது.

நன்றாகப் பழுத்திருந்த அந்தப் பலாப்பழம் குரங்கின் பாரம் தாங்காது காம்பு அறுந்து கீழே தொப்பென்று விழுந்து விடுகிறது. பழத்தோடு விழுந்த குரங்கும் பயந்து அதிர்ச்சியடைந்து நடுநடுங்கிப் போகின்றது. வீழ்ச்சியால் பயமடைந்த குரங்கு தன் ஆண் குரங்கை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்கிறது. தனது பயம் தெளிவதற்கு இவ்வரிய காட்சியை உமறுப் புலவர் பின்வருமாறு வழங்குகிறார்.

> பிடித்த கொம்பிருந்
> தோடி முட்
> குடக்கனி பிடித்துக்
> கடித்த போதினிற் காம்பறக்
> கனியுடன் கவியும்
> படித்த லத்தினில் வீழ்ந்திடப்
> பதறிமெய் பதைத்துத்
> துடித்துத் தன்னுயிர்க் கடுவனை
> யணைத்துட றுறுக்கும்.

(முட்குடக்கனி – பலாப்பழம், கவி – குரங்கு, படித்தலம் – நிலம் கடுவன் – ஆண்குரங்கு)

உமறுப் புலவரின் இதுபோன்ற வளமான பாடல்கள் அவர் தம் கற்பனைத் திறனுக்குச் சான்று பகர்வனவாய்த் திகழ்கின்றன.

(ம-வ)


## சவூதி அரேபியா

(2 நாட்களில் பிரயாணம்)

## —THAHIRAAS—

★ வீட்டுப் பணிப் பெண்கள்
(முஸ்லிம்/முஸ்லிமல்லா தார்)

★ வீட்டு டிரைவர்கள்
(முஸ்லிம்கள்)

★ பணிப்பெண்கள்/சாரதிகள்
(ஜோடி)

சார்ஜா—அபுதாபி—குவைட்—
டுபாய்—பாஹ்ரேயின்—ஓமான்

[விரைவான பயணம்]

பாஸ்போட் - பாஸ்போட் அளவிலான
6 கலர்ப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.

## தாஹிராஸ்

43—1/2 (மேல் மாடி)
பேங்ஸால் வீதி - கொழும்பு-11
புறக்கோட்டை

தொழில் அனுமதி இல- 707

# இ. தொ. கா — பொன் விழா



★ நாடற்ற, நலவுற்ற மக்களுக்கு நாட்டுரிமையும், குடியுரிமையும் பெற்றுக் கொடுத்த பெருந்தலைவா!

★ ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்கு ஒளிவீசும் ஒப்பற்ற தலைவா!


★ நாடும், ஏடும் போற்றும் நற்றமிழ் தலைவா!

★ சாதனைகளுக்குமேல் சாதனை படைத்த சாத்வீக தலைவா!

★ இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஆல்விருட்சத்தின்கீழ் பத்து லட்சம் மக்களை இணைத்துவைத்திருக்கும் இணையற்ற தலைவா!


★ ஐம்பது ஆண்டு காலம் அயராது, தளராது, ஓயாது, ஒழியாது மக்கள் சேவையின் தியாக சுடராய் சுடர்விடும் தலைவா!

★ அட்டன் மாநகரிலே பொன்விழா எடுக்கும் இந்த பொன்னான வேளையில், பல்லாண்டு வாழ்ந்து, மக்களுக்கு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டு கிறோம்.



—எஸ். சதாசிவம்—

நுவரெலியா மாநகர பிரதி நகர பிதா



நுவரெலியா மாநகர பிரதி நகர பிதா

மத்திய மாகாண சபை உறுப்பினர்





**With best wishes**

**Butani Exports Ltd.,– Rajagiriya.**

**Inatub Garments (pvt) Ltd.,–Nuwara Eliya.**

**P.M.K. Garments (pvt) Ltd.,– Giriulla.**





# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

— 12 —

திருமணம் முடிந்த பின் இன்றுதான் தேன்மொழி சிறிது நேரம் நிம்மதியாக நித்திரை கொண்டாள். மறுநாள் அதிகாலையிலேயே எழுந்த அவள் வீட்டு வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

தன் கணவனுக்காக சுவையான காலையுணவை தயாரிக்கவும் முற்பட்டாள். திலீபன் விழித்தபின் கொடுக்கலாம் என்பதற்காக தேநீரையும் தயாரித்து பிளாஸ்க்கில் ஊற்றி வைத்திருந்தாள். எனினும் வெகு நேரமாகியும் திலீபன் எழுந்து வரவில்லை.

நேரம் செல்லச் செல்ல என்னவோ ஏதோவென்று அவள் உள்ளம் பதறியது. அவனின் அறைக்குள் செல்லவும் பயம். அறைக்கு வெளியில் நின்று அவதானித்தாள்.

உள்ளே முனகல் சப்தம் கேட்டது. திலீபன்தான் வாய் பிதற்றிக் கொண்டிருந்தான். அதற்கு மேலும் அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். திலீபன் வ...தால் துடித்துக் கொண்டிருந்தான்.

"என்ன அத்தான் உங்களுக்கு?" என்று பதறியவளாக அவன் அருகில் சென்றாள்—

"ம்... உடம்பெல்லாம் வலிக்கிறது. மண்டையிடி தாங்க முடியவில்லை" என்றான் அவன்.

அவன் உடலைத் தொட்டுப் பார்த்தாள் தேன்மொழி. அது தணலாய்க் கொதித்தது. அவள் உள்ளம் பதறியது.

"கடவுளே! திருமணம் முடிந்தபின் நேற்றுத்தான் என்னோடு கொஞ்சம் முகம் கொடுத்து பேசினார். இன்று அவரை நோயாளியாக்கி விட்...

அவளுக்குத் தெரிந்த ஏதேதோ வைத்தியங்களையெல்லாம் செய்து பார்த்தாள். எதுவும் பயன் தரவில்லை. கடைசியில் டாக்டரை அழைத்து வருவதே சரி என்று தீர்மானித்தாள்.

அதுபற்றி அவனிடம் கூறியதும் அவன் தனக்கு அறிமுகமான டாக்டர் ஒருவரின் டெலிபோன் நம்பரை அவளிடம் கொடுத்தான். அவளும் விரைந்து டாக்டருக்கு டெலிபோன் பண்ணினாள்.

சுமார் அரை மணித்தியாலத்தில் டாக்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் அவனின் பால்ய நண்பர். திலீபனை நன்கு பரிசோதித்தார். பின்னர் தேன்மொழியை தனியாக அழைத்து,

"சிஸ்டர், உங்கள் கணவரின்

அது என்ன கவலையென்று அறிந்து அதைப் போக்க பரிகாரம் தேட வேண்டும். இருந்தாலும் இப்போது அவரின் நோய்க்கு மருந்து தருகிறேன். நேரம் தவறாமல் சரியாகக் கொடுங்கள். நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறேன். ஏதாவது அவசரம் என்றால் போன் பண்ணுங்கள். நான் வருகிறேன்" என்று கூறி போக ஆயத்தமானவரிடம்,

"டாக்டர் உங்கள் பீஸ்...?"

என்று தேன்மொழி கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

டாக்டர் சிரித்துக் கொண்டே,

"சிஸ்டர் நீங்கள் என்னை அந்நியனாக நினைத்து விட்டீர்கள். நான் திலீபனின் நெருங்கிய நண்பன். பீஸ் விஷயமெல்லாம் பின்பு பார்த்துக் கொள்ளலாம்.

அவள் எண்ணினாள்.

எப்படியிருந்த போதிலும் அவன் கவலையைப் போக்கி அவனுக்கு வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி வைப்பதே தன் குறிக்கோள் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

தன்னைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல் அவனை நன்கு கவனித்துக் கொண்டாள். வேளா வேளைக்கு மருந்து கொடுத்தாள். இரவும் பகலும் தூங்காமலும் சாப்பிடாமலும் அவனை கவனித்துக் கொண்டாள்.

இரண்டு மூன்று நாட்களாகியும் அவன் உடல் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. மாறாக உடல் நலம் குன்றியிருந்தான். எழுந்து நடமாடவும் சக்தியில்லாமல் இருந்தான்.

நாட்கணக்கில் நித்திரையில்லாமல் இருந்த அவளிடம் அவனைக் கவனிக்க வந்திருந்த நர்ஸ் தான் நன்கு கவனித்துக் கொள்வதாகக் கூறி நித்திரை செய்யச் சொன்னாள். நர்ஸை முழுமையாக நம்பிவிடா விட்டாலும் அவளின் மனத் திருப்திக்காக அவ்வப்போது சிறிது தூங்கி எழுந்தாள் தேன்மொழி.

அன்றும் அப்படித்தான். மணிக்கொரு தடவை சரியாக மருந்து கொடுக்க வேண்டும் என்பது டாக்டரின் கட்டளை. நித்திரையின்றி இருந்த தேன்மொழியை தூங்குமாறும் தான் கவனித்து மருந்து கொடுப்பதாகவும் நர்ஸ் கூறினாள்—


தேன்மொழி அவளிடம்,

"நர்ஸ், நாம் இருவரும் ஒரே கடமையைத்தான் செய்கிறோம். உங்களுக்குத் தூக்கம் வந்தால் தயவு செய்து என்னை எழுப்பிவிட்டுத் தூங்குங்கள்" என்று கூறிவிட்டு தூங்கச் சென்றாள்.

மணிக்கொரு தடவை நர்ஸ் முறையாக மருந்து கொடுப்பதை அவதானித்து திருப்திப் பட்டுக் கொண்டாள். அதனால் தன்னையும் அறியாமல் சிறிது நேரம் தூங்கிப் போய் விட்டாள்.

இதே வேளை நர்ஸும் மேஜை மீது தலைவைத்தவாறு தூங்கிப் போய் விட்டாள்.

மணிக்கொரு தடவை மருந்து சாப்பிட வேண்டும் என்பது திலீபனுக்கும் தெரியும்.



## அவளே என் உலகம்

— செ. குணரத்தினம் —

கன்னியிவள் கன்னமிரு கனி — சங்கு
கழுத்திற்குக் கீழுமிரு கனி!
பின்னிவரும் காலழகோ தனி — இதை
பார்த்தவர்கள் ஆவாரோ முனி?

★

காதல் மொழி பேசுவது விழி — அதை
கற்கண்டாய்க் கொட்டுமிவள் மொழி!
காமதேவன் தேடிவரும் கிளி — இவள்
காலமெல்லாம் மங்காத ஒளி!

★

உச்சிமுதல் உள்ளங்கால் வரை — காதல்
ஊற்றெடுக்கும் இன்பத்தேன்வதை!
சிற்பி வந்து செதுக்காத சிலை — இந்த
செகத்தினிலே இவள் புதிய கலை!

★

தேனிதழில் மட்டுமல்ல மது — இவள்
தேகமெல்லாம் ஊறிவரும் அது!
ஏழிசைக்குள் அடங்காத இசை — இந்த
இசைமேனி இல்லை வெறும் சதை!

★

எத்திசையில் பார்த்தாலும் அழகு — எனக்கு
இவள்தானே ஈரேழு உலகு!
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் இழவு — என்னை
சந்திக்க விடாதிவளின் உறவு!

யாமல் தவித்தான். பின்னர் தானே மருந்தை எடுத்துக் குடித்து விடுவது என்று நினைத்து மெதுவாக எழ முயற்சித்தான்.

அந்த சிறு அசைவில் தேன்மொழி விழித்துக் கொண்டாள். விழித்ததும் கடிகாரத்தைப் பார்த்தாள். அது மூன்று மணியென்பதைக் காட்டியது. ஒருவித விரக்தியுடனும், வெறுப்புடனும் நர்ஸைப் பார்த்தாள்.

அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். "இவளை நம்பினோமே!" என்று தன்னையே நொந்து கொண்ட அவள் உடனடியாக மருந்தை எடுத்து கலக்கி திலீபனுக்குப் பருக்கினாள். பின்னர் கண்ணை இமை காப்பது போல் அவனுக்கு அருகில் இருந்த அவனைக் கவனித்துக் கொண்டாள்.

சிறிது நேரத்துக்குப் பின் நர்ஸ் கண் விழித்தாள். அடுத்த அவள் கண்கள் கடிகாரத்தை

...கள்" என்றாள் தேன்மொழி கடுமையாக.

"அம்மா! பிளீஸ் மன்னித்துக் கொள்ளுங்கள். என்னையறியாமல் தூங்கி விட்டேன்" என்றாள் நர்ஸ் நடுங்கியபடி.

"பரவாயில்லை. இனி நானே மருந்து கொடுத்துக் கொள்கிறேன். உங்களுக்குத் தூக்கம் வந்தால் என்னை எழுப்பி விட்டுத் தூங்கச் சொன்னேன் தானே?"

"உண்மைதான் அம்மா! தவறுதான். பிளீஸ் மன்னித்துக் கொள்ளுங்கள். டாக்டருக்குத் தெரிந்தால் எனக்கு வேலையே போய்விடும்"

"பயப்படாதீர்கள். நான் டாக்டரிடம் சொல்லமாட்டேன். எனக்கு வேண்டியதெல்லாம் என் கணவர் பிழைத்து எழ வேண்டும். நீங்கள் சம்பளத்துக்குத்தானே வேலை செய்கிறீர்கள். என்னைப் போல நீங்களும் அக்கறை கொள்ள வேண்டுமென்று நான் எதிர்பார்க்கலாமா?" என்றாள் சலிப்புடன்.

"அப்படிச் சொல்லாதீர்கள் அம்மா, இனி இப்படி தவறு நடக்காது" என்றாள் கெஞ்சியபடி.

"சரி சரி... பரவாயில்லை. நீங்கள் சிறிது ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவளை வற்புறுத்தினாள் தேன்மொழி.

தொடர் கதை

முடிந்தபின் நேற்றுத்தான் என்னோடு கொஞ்சம முகம கொடுத்து பேசினார். இன்று அவரை நோயாளியாக்கி விட்டாயே தெய்வமே! என்ன சோதனை இது? எனக்கேன் இப்படிப்பட்ட துன்பம. நான் என்ன பாவம செய்தேன்?"

இப்படி அவள் மனம அழுதது.

சேர்ந்தார். அவர் அவனின் பால்ய நண்பர். திலீபனை நன்கு பரிசோதித்தார். பின்னர் தேன்மொழியை தனியாக அழைத்து,

"சிஸ்டர், உங்கள் கணவரின் மனோநிலை மிகவும பாதிக்கப்பட்டுள்ளது. அவரின் மனதில் உள்ள ஏதோ கவலைதான் அவரை நோயாளியாக்கியுள்ளது.

சிஸ்டர் நீங்கள் என்னை அந்நியனாக நினைத்து விட்டீர்கள். நான் திலீபனின் நெருங்கிய நண்பன். பீஸ் விஷயமெல்லாம பின்பு பார்த்துக் கொள்ளலாம. வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

தேன்மொழிக்கு தற்பொழுது எல்லாம புரிந்தது. "தன் கணவன் யாரோ ஒரு பெண்ணை உயிருக்குயிராக காதலித்திருக்கிறான். அந்தக் காதல் தோல்வியில் முடிந்திருக்கிறது. நிர்ப்பந்தத்தால் தன்னை மணந்திருக்கிறான். அதனால்தான் தன்னை வெறுத்திருக்கிறான்" இப்படி

மாற்றம ஏற்படவில்லை. மாறாக உடல் நலம குன்றியிருந்தான். எழுந்து நடமாடவும சக்தியில்லாமல் இருந்தான்.

டாக்டர் அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போனார். அத்துடன் இரவுக்கும பகலுக்குமாக இரண்டு நர்ஸ்மார்களை அவனைக் கவனித்துக் கொள்வதற்கென நியமித்தார்.

பட்டினியுடனும சோகத்துடனும இருந்த தேன்மொழியை வேலைக்காரி முத்தமமாதான் அவ்வப்போது வற்புறுத்தி சிறிது சிறிது சாப்பிட வைத்தாள்.

தூங்கிப் போய் விட்டாள்.

மணிக்கொரு தடவை மருந்து சாப்பிட வேண்டும என்பது திலீபனுக்கும தெரியும.

நேரம அதிகாலை மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. திலீபன் தேன்மொழியைப் பார்த்தான். அவள் தன் காலடியில் தலைவைத்தபடி உறங்கிக் கொண்டிருந்தாள்.

பல நாட்கள் தூங்காமலிருந்த அவளை எழுப்ப மனம வரவில்லை அவனுக்கு. "பாவம தூங்கட்டும" என்று எண்ணிய அவன் நர்ஸை எழுப்ப வழி தெரி

அருகில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டாள்.

சிறிது நேரத்துக்குப் பின் நர்ஸ் கண் விழித்தாள். அடுத்து அவள் கண்கள் கடிகாரத்தை நோக்கின. அது மூன்றேகால் என நேரத்தைக் காட்டியது.

அவளுக்குத் தன் தவறு புரிந்தது. எனினும அதனை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மருந்தை எடுத்துக் கொடுக்கத் தயாரானாள்.

"நர்ஸ்! நான் மருந்து கொடுத்து விட்டேன். நீங்கள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங

படி.

"சரி சரி... பரவாயில்லை. நீங்கள் சிறிது ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவளை வற்புறுத்தினாள் தேன்மொழி.

அதன் பின்னர் அந்த நர்ஸ் தன் கடமையில் கண்ணும கருத்துமாக இருந்து வந்தாள்.

இப்படியே சில நாட்களும கழிந்தன. திலீபனின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம தெரிந்தது. எனினும மிகப் பலவீனமாகக் காட்சியளித்தான்.

(தொடரும)

# உயிருக்கு உயிரானேன்

— எம். வை. எம். அலி —

சில்லென்ற சிறுகாற்று ஒன்று — அவள்
சிரிக்கின்ற விதங்கண்டு நின்று
செல்கின்ற இடங்கூடச்
சரியாகப் புரியாமல்
தள்ளாடும நிலைகண்டு கொண்டேன்!

★

இளங்காலை நேரத்துத் தென்றல் — வந்த
இவள் யாரோ? ரதி தானோ! என்றே
விலகாத விருப்போடும ப
வியப்போடும நிறைந்த
அழகாளின் உடல்தீண்டக் கண்டேன்!

★

அந்தியிலே ஆடிவரும காற்று — அந்த
இன்முகத்தாள் நாமத்தைக் கேட்டு
சந்திரனில் முகமெடுத்த
சுந்தரியோ இவளென்று?
செந்தமிழிற் பாடியதோர் பாட்டு!

★

மழைக்காற்றுக் குளிர்வாடை வீசி — அம
மலர்மாதின் உடலெங்கும பூசி
தலை தீண்ட வருமபோது
அலைபாயும குழல்கண்டு
ஏழில்மேகம இதுவென்று பேசும!

★

கடற்காற்றுக் கரைநோக்கிப் பறக்கும — ஆனால்
கடல் நோக்கத் தரைக்காற்று மறக்கும!
அட ஏனோ? இதுவென்றேன்
விடை கண்டேன்! அவள் தேகந்
தொடுங்காற்று அவளோடே இருக்கும!

## இந்திரா காந்தி: உருவத்தை டைப் பண்ணியவர்

மகாராஷ்டிர மாநில, ஜலகான் மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ், டி மஜூமதாருக்கு வயது 21, பாலிடெக்னிக்கில் படிக்கிறார்,

இவருக்கு கின்னஸ் புத்தகத்தில் தன் பெயர் இடமபெற வேண்டும என்று ஆசை, 12 அடி நீளம 4 அடி அகலமுள்ள காகிதத்தில் இந்திரா காந்தியின் உருவத்தை டைப்ரைட்டர் மூலம "டைப்" செய்தார்.

இதுபோல், பல உருவங்களை டைப் செய்த முன் அனுபவம இவருக்கு உண்டு!

காந்தி ராஜீவ் விவேகானந்தர், கொர்பச்சேவ் இப்படிப் பலரது உருவங்களை டைப் மூலம வரைந்துள்ளார்,

கின்னஸ் புத்தகத்தில் இடம பெற வேண்டி, இவ்வளவு "பெரிய" படத்தை டைப் செய்துள்ளார்!

(த-10

# நகைச்சுவை மஞ்சரி



"என் பொண்ணு சூப்பர் ஸ்டார் தெரிஞ்சுக்கோ அவளோட அப்பாவுக்கு போய் மைனர் ஆபரேஷன் செய்யப் போறீங்களே... சே...சே அவமானம. மேஜர் ஆபரேசன் பண்ணுங்க டாக்டர்!"

★

"நேத்து ராத்திரி உங்க கார்ல யாருக்கு லிப்ட் கொடுத்தீங்க?"


"என் நண்பனுக்கு..."

"உங்க நண்பனுடைய ஹேர் பின் ரிப்பன் எல்லாம கார்ல கிடைச்சது. அவனிடம கொடுத்துடுங்க!"

★


"கச்சேரியை ஏன் பாதியிலேயே நிறுத்திட்டு ஓடறார் பாடகர்...?"

"கொலைன்னு இரண்டெழுத்து கேள்விப்பட்டிருக்கிரா... அது இன்னும கொஞ்சு நேரத்தில



நடக்குமனு எவனோ பாடகருக்கு சீட்டு எழுதி விட்டிருக்கான்"

★



"ஊருக்கு போனதும கடிதம போடுறேன்"

கடிதத்துக்கு என்னங்க அவசரம... முதலில மணியார்டர் அனுப்புங்க!"

★

"மரியாதையா என் கடனை தீர்க்கறயா? இல்ல என் கடனை தீர்த்துட்டேன்னு மத்த கடங்காரங்ககிட்ட சொல்லவா?"

★

"சார்! நாளைக்கு ஒரு நாள் லீவு வேணும எனக்கு அறுபதாம கல்யாணம..."

"நீங்க இப்படி அடிக்கடி லீவு போடறது கொஞ்சம கூட நல்லாயில்ல. இப்பதானே முப்பது வருஷத்துக்கு முந்தி கல்யாணமனு ஒருநாள் லீவு போட்டிங்க...!?"

★

"நேற்றுதானே இந்த நர்சிங் ஹோமில் சேர்ந்தே. அதற்குள் டிஸ்சார்ஜ் பண்ணச் சொல்றியே! ஏன்?"

"இங்கே உள்ள எல்லா இளம நர்ஸ்களுக்கும கல்யாணமாயிட்டுது என்ற தகவல் இப்பதானே தெரிஞ்சுது!"

★

"மாப்பிள்ளே எப்படியமமா இருக்கார்?"

அதையேமபா கேட்கிறே? திருடப்போக மாட்டேங்கிறார். பொய் சொல்ல மாட்டேங்கிறார்.

"என்னமோ போ... தரகர் பேச்சை நமபி எமாந்தாச்சு!"

★

"ஜோக் சொல்லச் சொல்றியே... எதுக்கு?"

"முகத்தை ரொமப சோகமா வச்சுக்கிட்டு மேனேஜர் கிட்டப் போய் லீவ் கேக்கணும!"

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

செல்வி ரமலான் வஹாப்,
தெல்தோட்டை.
கே- சில நேரம முயற்சிகள் கூட தோல்வி அடைவது ஏன்?
ப- இன்னொரு தடவை முயன்று பார்க்க வேண்டும என்பதற்காக!

★

அனஸ் றமஸான்,
அக்குறணை.
கே- நீங்கள் ஒரு பெண்ணை விருமபி - அந்தப் பெண் உங்களை விருமபா விட்டால் என்ன செய்வீர்கள்?
ப- இதில் செய்வதற்கு என்ன இருக்கிறது? விருமபியதை வாங்குவதற்கு மற்றொரு கடையைப் பார்க்க வேண்டியது தான்!

★

சுல்தான் எம மஹ்றூப்,
அநு/கட்டுக்கெலியாவ.
கே- காதலில் தோல்வியடைந்த ஒரு ஆணும, காதலில் தோல்வியடைந்த ஒரு பெண்ணும சேர்ந்து புதிதாகக் காதலித்தால் எப்படியிருக்கும?
ப- எல்லாம "செகண்ட் ஹாண்ட்" வியாபாரமாக இருக்கும!

★

ச செல்வா.
தமபிலுவில்!
கே- இலங்கையைப் பொறுத்த வரை அதிக வருமானம தரும தொழில் என்ன?
ப- அரசியல்!

★

ஏ எஸ் நிஜாம,
எம ஆர் எம தவ்பிக்,
வாரியப்பொல.
கே- நீங்கள் திருமணம முடித்ததும முதன் முதல் என்ன செய்தீர்கள்?
ப- முதலில் பழம உண்டேன்! பின்னர் பால் குடித்தேன்!

★

செல்வன் எம ஆர் எம நௌஸாட்,
மாவனல்லை.
கே- குத்துச் சண்டை வீரர் முகும்மது அலி உங்களை குத்துச் சண்டைக்கு அழைத்தால் நீங்கள் செல்வீர்களா?
ப- பாவம இப்போது அவர் குத்துச் சண்டை போடுவதில்லையே!

★



டி எம சௌந்தரராஜன்

ஏ எம அன்வர் சாதாத்,
புத்தளம.
கே- உங்களைச் சுற்றி ஆண்கள் இருப்பது பிடிக்குமா? பெண்கள் இருப்பது பிடிக்குமா?
ப- சுற்றிக் கொசுக்கள் இல்லாத இடம பிடிக்கும!

★

எஸ் எச் எம பாஸில்,
அக்குறணை.
கே- நீரும, உமது மனைவியும சண்டை பிடித்துக் கொண்டால் வெற்றி யாருக்கு!
ப- சரணடைபவருக்கு வெற்றி ஏது? இது தெரியாதா?

★

பதுருன் நிஷா,
நூருன் நிஷா,
அனுராதபுரம.
கே- காதலுக்கு முதல் அனுமதி பெறவேண்டிய இடம எது?
ப- யார் காதலுக்கு!

★

எம பிரபாகரன்.
எம பிரமிளா, வ
மாத்தளை.
கே- "மௌனமாக இருப்பவள் பாதி இசைகிறாள்" என்பது எந்தளவுக்கு உண்மை?
ப- எதற்கு?

★

எம எம நிஸாம,
குருகுத்தலை.
கே- நான் ஒரு பெண்ணை விருமபுகிறேன்! விருப்பத்தைக் கேட்டேன் - பதில் தரவில்லை! எப்படி விருப்பத்தை அறியலாம?



முக்மமது அலி

ப- வாயால் கேட்பதை நிறுத்திக் கொண்டு எழுத்தில் கேட்டுப் பாரும!

★

செல்வி வி இமல்டா,
மாத்தளை.
கே- கேள்வி - பதில் பகுதியில் பெண்களை ஏன் நிலவுக்கு ஒப்பிடுகிறார்கள்? என்று ஒருவர் கேட்டிருந்தார்! அதற்கு நீங்கள் மணமான பெண்களைப் பற்றித் தான் கூறியிருந்தீர்கள்! மணமாகாத இளம பெண்களை நிலவுக்கு ஒப்பிட்டு விளக்கம கேட்டால் என்ன விளக்கம தருவீர்கள்?
ப- மணமான பெண்கள் தாம நிலவுக்குச் சமன்! மணமாகாத பெண்கள் "ஸ்டார்"கள் அல்லவா?

★

ஏ மர்சூக்,
புத்தளம.
கே- உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்? நடிகை யார்?
ப- பிடித்த நடிகர் எஸ் வி சேகர்! பிடித்த நடிகை மனோரமா!

★

மைக்கல் கிறிஸ்டன்,
கண்டி-
கே- மீசை வச்ச ஆமபிளைக்கு இப்போது "டிமாண்ட்" - உங்களுக்கு எப்படி?
ப- எனக்கு மீசை உண்டு. ஆனால் என்னுடைய "டிமாண்ட்" எவ்வளவு என்பது எனக்கே தெரியவில்லை!

★

எம எம ஹாஸ்கீன்,
வறக்காமுறை,
கே- வெளிநாடு சென்று வந்த பெண்கள் கணவன்மார்களை மதிக்காதது ஏன்?
ப- வெளிநாட்டில் கிடைத்த திருப்தி உள்நாட்டில் கிடைக்காததால்!

★



மனோரமா

செல்வன் எம மகேந்திரன்,
அலவத்துகொட.
கே- வழக்கறிஞர்கள் உண்மை பேசும காலம வருமா?
ப- வழக்கு என்று வந்து விட்டால் இரண்டு பக்கமும பொய்கள் தாமே ஜோடிக்கப்படுகின்றன!

★

சுஹைறதா ஏ கரீம,
கொழுமபு-6.
கே- சின்ன வீட்டு விவகாரத்திற்கு யார் காரணம? ஆண்களா? பெண்களா?
ப- முதல் பெண்தான்! வீட்டுச் சாப்பாடு நன்றாக இருந்தால் ஹோட்டல் சாப்பாட்டை யார் விருமபுவார்?

★

செல்வி அமீனா ஹமீட்,
போகஹகுமபுறை.
கே- டி எம சௌந்தரராஜன் எஸ் பி பாலசுப்ரமணியம, மலேசியா வாசுதேவன் இவர்களில் உங்களுக்குப் பிடித்த பாடகர் யார்?
ப- டி எம எஸ் தான்.

★

பெ சந்திரமோகன்,
பூண்டுலோயா.
கே- மெழுகை விட விரைவில் உருகக் கூடியது என்ன?
ப- இளகிய நெஞ்சு!

★

இர்சாட் முகமட்,
கந்தளாய்.
கே- உங்கள் வாழ்வில் நீங்கள் சிரித்தது அதிகமா? அழுதது அதிகமா?
ப- அழுகை வரும கட்டத்திலும சிரிக்கக் கூடியவன் நான்!

★

புகளின் பக்கபலத்தின் மூலமும தென் ஆபிரிக்க கெரில்லா இயக்கஙகளை விரட்டி அடித் தது.

அஙகோலாவில் இப்படி உரு வான மார்க்ஸிச அரசு நமீபியா வில் "ஸ்வாபோ" கெரில்லா இயக்கத்திற்கு ஆதரவு வழஙகி யது. தளம அமைக்க இடம அளித்தது.

இதனால் அஙகோலாவின் தென் பகுதி அடிக்கடி தென் ஆபிரிக்கத் துருப்புகளின் தாக்குத லுக்கு இலக்காகி வந்தது.

ஜோனாஸ் சவிமபி என்பவ ரின் யுனிடா கெரில்லா இயக்கத் திற்கு தென் ஆபிரிக்கா பக்கபல மாக இருந்து ஆதரவளித்தது.

நீட்டோ 1975இல் காலமா னதையடுத்து டொஸ் சான் டொஸ் அஙகோலாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

## தென் ஆபிரிக்கா

## படை எடுப்பு

ரஷ்யா, கியூபா ஆகியன வற்றின் ஆதரவுடன் யுனிடா கெரில்லா இயக்கத்திற்கு எதிராக அஙகோலா தாக்குதலை நடத்தியது. இதனைத் தடுத்து நிறுத்த 1987இல் அஙகோலா மீது தென் ஆபிரிக்கா படை யெடுப்பை நடத்தியது.

கியூபாவும மேலதிக துருப்பு களை அஙகோலாவுக்கு அனுப்பி யது. அது நமீபிய எல்லை வரை துருப்புகளை நகர்த்தியது.

நெருக்கடிகள் இவ்வாறு முற்றின. இந்தத் தருணத்தில் 1988 சமரச முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

அமெரிக்காவின் சமரசத்தின் பேரில் 1988 மே மாதம தென் ஆபிரிக்கா, அஙகோலா, கியூபா



நீட்டோ

மாதம அவை யுத்த நிறுத்தத் தைப் பிரகடனப்படுத்தின.

தென் அஙகோலாவில் இருந்த தென் ஆபிரிக்கத் துருப்புகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

1988 டிசமபர் 13ஆம திகதி இந்த மூன்று நாடுகளும சமா தான ஒப்பந்தம ஒன்றில் கைச் சாத்திட்டன. அதில் பின்வரும அமசஙகள் சேர்க்கப்பட்டிருந் தன.

* நமீபியாவுக்கான ஐ நாவின் சுதந்திர பிரகடனத் திட்டம 1989 ஏப்ரல் முதலாம திகதி ஆரமபமாக வேண்டும.
* 1991ஆம ஆண்டளவில் கியூபா நாட்டுத் துருப்புகளும அங கோலாவை விட்டு வெளியேறி விடும.

இந்த வரலாற்றுப் பின்னணி யில் நமீபியாவுக்கு இப்போது சுதந்திரம கிடைத்து விட்டது.

ஒருவன் நீதிமன்றத்திற்குப் போகிறான் என்றால் ஒரு பூனையை மீட்க ஒரு மாட்டை இழக்கப் போகிறான் என்று பொருள். இந்தச் சீனப் பழ மொழி நமீபியா விவகாரத்தில் பொருளற்றுப் போய் விட்டது.

(ண)

# கருணை



எம்.ஐ. உஸனார் ஸலீம்

அந்தப் பெரிய மனிதனின் செய்கையை நினைத்தபோது, எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது, "சே... இவனுகளும பெரிய மனுஷனுகளா? எனக்குள் நானே அவரைத் திட்டிக் கொண்டே நடக்கிறேன்,

மூன்று நாட்களுக்கு முன்னர் காலை வேளையில் ஒரு வேலை காரணமாக அம்பாறைக்குச் சென்ற போது வருவதற்குள் நண்பகலாகி விட்டது.

காலையில் எதுவுமே சாப்பிடாமல் வந்ததால் பசி வயிற்றைக் கிள்ளியது, கையிலே சாப்பிடுமளவு காசுமிருக்கவில்லை. பஸ் காசைத் தவிர்த்தால் ஒன்றரை ரூபாய் மட்டுமே பாக்கியிருந்தது.

ஒரு பிளேன்ரியாவது குடிப்போமென்று முடிவெடுத்த போது தான் நிந்தவூருக்கான பஸ்ஸும வந்தது, பசியை மறந்து விட்டு வந்து பஸ்ஸில் ஏறி ஒரு சீற்றில் இடத்தைப் பிடித்து ... கொண்டேன்.

... கொண்டே பஸ்ஸில் ஏறினான்.

அவனின் கெஞ்சலுக்கு இரங்கி "ஐயோ பாவம!" என எல்லோருமே இரங்கி தங்களால் இயன்ற பணத்தை அவனுடைய பாத்திரத்தில் போட்டார்கள்.

எனக்கும இனம்புரியாத இரக்கம் பிறந்தது, நானும என்னிடமிருந்த ஒன்றரை ரூபாவை அவனுக்குக் கொடுத்து விட்டுத் திருப்திப் பட்டுக் கொண்டிருந்த போது தான் எனது ஆசனத்தில் அமர்ந்திருந்த பெரியவரின் முன்னும பையனின் பாத்திரம நீண்டது,

அவரோ மறு பக்கத்துக்குத் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டார், பையன் கால்களையும பிடித்துக் கெஞ்சிப் பார்த்தான், பெரியவரோ, "சே... பேசாமல் போப்பா" என அவனை விரட்டியே விட்டார்.

எனக்கோ இதைப் பார்த்த போது நெஞ்சே கனத்தது, பெரியவர்மேல் கோபம கோபமாக ஏற்பட்டது,

கருணையே இல்லாத ஒருவருக்கு, மதிப்பும மரியாதையும கொடுத்ததற்காக என்னை நானே திட்டிக் கொண்டிருந்த போது பஸ்ஸும புறப்பட்டது.

அந்தச் சம்பவத்தை நினைத்து ஆத்திரப் பட்டுக் கொண்டே வேகமாக பள்ளி வாசலுக்கு நடக்கிறேன்.

அப்போதுதான் அந்தப் பெரியவர் கையிலே பையொன்றுடன் நடந்து வருவது கண்ணிலே பட்டது,

"இன்றைக்கு இவரை விடக் கூடாது" என நினைத்தபடி அவரை நெருங்கி "சார் உங்க மனசில துளிகூட கருணையே இல்லயா? அண்ணிக்கி பஸ்ஸில அந்த அனாதைகளை அப்படி இரக்கமே இல்லாம வெரட்டினீங்களே நீங்க மனிசங்கதானா... சே... பாத்தா பெரிய மனிசன்" திட்டி விட்ட திருப்தியில் நடக்க முனைந்தபோது அவர் என்னைத் தடுத்தார்—

"தம... கொஞ்சம நில்லுப்பா" நான் சற்று நின்ற போது "தம்பி... உனக்கு மட்டுமல்ல யாருக்குமே நான் நடந்துக்கிட்ட விதம கோபமாத்தான் தெரியும...

ஆனா அந்தப் பையனுக்கு மனமிரங்கி பிச்சைபோட்ட நீங்கெல்லாம அவங்க இப்ப வாழ்ந்துக்கிட்டிருக்கிற வாழ்க்கையை நெனச்சித்தான் பிச்சையே போட்டீங்க...

ஆனா அவங்க எதிர்கால வாழ்க்கையை நான் மனசில நெனச்சி வேதனப்பட்டதாலதான் அவங்கள அப்பிடி விரட்டி விட்டன்" அவர் சொன்னது எனக்குப் புரியவில்லை—

அவரின் முகத்தைக் கேள்விக் குறியுடன் நோக்கியபோது, விட்ட பேச்சை மீண்டும தொடர்ந்தார் "ஆமாப்பா... அந்தப் பையன் நல்லாவே புத்தி தெரிஞ்ச பையன்—

அவனுக்கு அவன் கேக்கிறப் போவெல்லாம பிச்சை கொடுக்க ஆளிருந்தா அவன் அந்தக் கஷ்டமில்லாத சம்பாத்தியத்தையே கடைசிவரைக்கும தன்னோட தொழிலாக்கிக்குவான்...

அது மட்டுமில்லாம அவன் தூக்கிக் கொண்டு வந்த பச்ச மண்ணும கூட நாளைக்கி அவனாட்டம பழகிடும... இதனால நாமளாவே ஒரு பிச்சைக்காரச் சமூகத்த உருவாக்க ஏதுவாகிடுவம...

இப்படியான சின்னப் பயல்கள் பிச்சை கேக்கிறப்போ நாம அவங்களுக்கு நமம அறிவுரைகளை மட்டும தான் அள்ளிப் பிச்சையாக கொடுக்கணும... அப்பதான் எதிர்காலத்தில் அவங்க வாழ்க்கையும் இருளாகிப் போகாம ஒளிமயமானதாக அமையும—

வரப் போகும புனித மாதத்திலே நாம ஏன் பிச்சைக்காரர்களை உருவாக்க வேண்டும—

இத நெஞ்சில நெனச்சதால தான் அப்பிடி நான் நடந்துகிட்டன்" பெரியவர் பேசி முடிந்த போது எனக்கு கோபமாக இருந்தது—

"மத்தவங்களப் புத்தி சொல்லச் சொல்றீங்களே... நீங்க அன்னிக்கு அவங்கள அடிக்காத குறையா வெருட்டி விட்டது நியாயமானதா?" நான் கேட்ட போது தம்பி நியாயமான கேள்வி கேட்டீங்க... நான் அடுத்தநாளே அவங்கள எங்க வீட்டுக்குக் கூட்டி வந்திட்டன்...

எங்க பிள்ளைகளா நெனச்சி அவங்கள வளத்து படிக்கவைக்கப் போறம... எங்க வீட்டுப் பிள்ளைகளா இப்ப அவங்க சந்தோசமா இருக்கலாங்க"

அவர் பேசி முடிந்த போது எனக்குப் பெரும சங்கடமாகி விட்டது— அந்த நல்லவரின் இதயத்தைப் புண்படுத்தி விட்ட குற்றத்திற்காக அவரிடம மன்னிப்புக் கேட்டுக் கொண்டே நடக்கிறேன்—

அப்போது எனது இதயம என்னைப் பார்த்தே சிரிக்க ஆரம்பிக்கிறது "கருணை இல்லாதவன் யார்? நீயா அல்லது அவரா?" என் இதயத்தின் வினாவுக்கு விடை தெரிந்து கொண்டு வெட்கத்தோடு நடக்கிறேன்!

(த்)

## நீடித்து வாழும் திட்டம்

— ஏ. எம். எம். அலி —

தொன்றுதொட்டுப் பேசுகின்ற செந்தமிழால்
தொடர்ந்துவரும நட்புறவுத் தோழமையால்
அன்றுதொட்டு நிலவுகின்ற "அருமை"யினால்
அன்றாடம சோதரர்போல் வாழ்ந்த நமக்குள்
இன்றுமட்டும ஏன்மோதல்? வீண்சாவு?
எதற்கிந்த விரோதங்கள் சண்டை வேண்டாம!
பண்டுதொட்டு நாமகொண்ட நட்புறவு
பாழாகிப் பகைமை கொள்ளின் லாபமில்லை!

★

பகைமைக்குத் தூபமிடுங் குணத்தினாலே
பலனில்லை! சாவுகளே நிகழலாச்சு!
ஒருமைக்கும ஒற்றுமைக்கும உயிரையூட்டி
ஒன்றுபட... உயர்வுபட... வாஞ்சை
கொள்வோம!

இன்றைக்கு இனியதமிழ்ப் பூமுகரும
இருசமூகம தமக்குள்ளே அடித்துக் கொண்டால்
குன்றுக்கு மேலிட்ட கலத்தைப் போன்று
குலைந்து நொறுங் கிடுமன்றோ! நமது வாழ்வு?

★

அறிவுக்கும ஆற்றலுக்கும வேலை வேண்டும
ஆவேசம ஆத்திரம அடங்கல் வேண்டும
குறிவைக்குங் குணமிருந்தால் குழப்பங் கூடும
குருதியிலே ஆவேசங் கொதித்து ஓடும
உயிர்பறிக்கும இந்நிலைமை மாறவேண்டும
ஒவ்வொருவ ரும;உணர்ந்து திரவேண்டும
வயிறெரிக்கும அப்பாவி மக்கள் மீது
வைக்கின்ற பேரன்பு வழிய வேண்டும

## ஓகோ! எங்களை விருந்துக்கு அழைத்தது இதற்குத்தானா...



அமர்ந்து கொண்டேன்.

## சின்னஞ் சிறுகதை


சற்று நேரம கடந்தது, ஒரு பெரிய வயதான மனிதர் பஸ்ஸி னுள் ஏறினார், ஆளைப் பார்த் தால் மார்க்கப்பற்று நிறைந்தவ ராகத் தெரிந்தத, அவர் இருக்க பஸ்ஸில் ஆசனமே இருக்க வில்லை.

சீற்றுகள் எல்லாவற்றிலுமே ஆட்களாருந்தார்கள், எனது ஆச னத்திற்கருகில் வந்து நின்று அவர் ஒரு கையினால் கமபியைப பிடித்தபடி மறு கையில் ஒரு கனமான பார்சலுடன் நின்றார்.

என் அருகே வந்து நின்ற அவ ரைப் பாாத்ததும என்னையறி யாமலே அவர் மீது எனக்கு ஒரு இனமபுரியாத மரியாதை ஏற் பட்டது.

மறுகணம நான் எழுந்து எனது ஆசனத்தில் அவரை அம ரச் சொன்னதும எனககு நன்றி கூறுவதற்குப பதிலாக ஒரு புன் னகையை உதிர்த்தவாறு எனது ஆசனத்தில் அமாநது கொண டார்.

"ஐயாமாரே... அமமா மாரே... நாஙக அனாதைகள்... எஙகளுக்குப் பிச்சை போடுங கோ... உஙகளுக்குப் புண்ணியம கிடைக்கும" எனும வார்த்தை களை உச்சரித்தபடியே ஒரு பத்து வயதுப் பையன் தனது கையிலே ஒரு மூன்று வயது மதிக்கத்தக்க பையனையும தூக்கிக்

"என்ன, சுந்தரி . சாப்பாட்டு மேசைக்கு வந்ததும் திகைச்சுப் போய் நிற்கிறீர். உட்காருமன்"

"பாருமப்பா, எவ்வளவு வடிவான மேசை கதிரைகள் ... இதுகளின்ர அழகைப் பார்த்தால் உட்கார மனமே வருகுதில்லே"

"நீர் மட்டுமில்லே, இஞ்ச வாற எல்லாரும் இந்த சிங்கர் சாப்பாட்டு மேசை கதிரைகளைப் பற்றி இப்பிடித்தான் புழுகித் தள்ளுகினம். நாகரீகமான தோற்றமாம். நியாயமான விலையாம்."

"தரமான மரம் எண்டதால நீண்ட காலமும் பாவிக்கும், அப்பிடித்தானே?"

"ஓமோம் . . அதுசரி, இன்னமும் நிக்கிறீரே உங்காருமன்"



ஓர்கிட் சாப்பாட்டறைத் தளபாடங்கள்

"ச்சா .. பாருமன் மனுஷியின்ர முகத்தில தெரியிற சந்தோஷத்தை. சரியா ஓர்கிட் மலர் பூத்தது போல ... இந்தத் தளபாடங்களைக் காட்டத்தான் எங்களை விருந்துக்குக் கூப்பிட்டனீர், என்ன"

ரூபா. 8,990/-

சிங்கர் தரச்சிறப்பில் நீங்கள் வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் உன்னத தளபாடங்கள்

சிங்கர்*

மாசற்ற மேன்மை

சிங்கர் தளபாடங்கள் உங்கள் இல்லத்தை எழிலாக்கும்

SLL 3994

WOMAN & HOME



# மனையும் மங்கையும்

# இளம் யுவதிகள் தீய வழியில் செல்ல போதை மயக்க மோகம் காரணம்

1980ஆம் ஆண்டுக்கு முன்னர் போதைப் பொருள் பாவனை இலங்கையில் அதிகம் காணப்படவில்லை. 1984ஆம் ஆண்டுக்குப் பின்னரே போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்கள் நாட்டில் அதிகரிக்கத் தொடங்கின.

## நெறி தவறியவர்களுக்கு மறு வாழ்வு தரும் திட்டம்

இப்போது சிறைச்சாலைக் கைதிகளையோ அல்லது விளக்கமறியல் கைதிகளையோ எடுத்துக் கொண்டால் அவர்களில் அதிகமானோர் போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்களாகவே இருக்கிறார்கள். அந்தளவுக்கு இலங்கையில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து விட்டது.

போதைப் பொருள் பாவனையென்பது பல்வேறு சமூக குற்றங்களுடன் தொடர்பு கொண்ட ஒரு கொடிய பழக்கம். கொலை வழிப்பறி மோசடி விபசாரம் போன்றவற்றுக்குத் தூண்டுகோலாக இப்பழக்கம் விளங்கி வருகிறது.

இலங்கைப் பெண்களிடமும் கூட இக்கொடிய பழக்கம் இப்போது பரவி வருகிறது. இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்ட போது நகர்ப்புற விபசாரத்திற்கும் போதைப் பொருள் பாவனைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவது தெரியவந்துள்ளது.

இளம் சிறுவர் சிறுமியரை விபசாரத்தில் ஈடுபடுத்தும் சமூக விரோதச் செயல் நாட்டின் முக்கிய நகரங்களில் இப்போது இலைமறை காயாக நடைபெற்று வருகிறது. சிறுவர் சிறுமியரை தமது முரட்டுக் காம இச்சைக்குப் பலியாக்குவதில் வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி உள்நாட்டவர்களில் சிலருக்கும் தணியாத மோகம் காணப்படுவதால் இவ்வியாபாரம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இன்று இத்தொழிலைச் செய்து வரும் சிறுவர் சிறுமியரை எடுத்துக் கொண்டால் அவர்களில் எழுபத்தைந்து சதவீதம் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களே!

இதற்குக் காரணம் உண்டு. இளம் பராயத்தினரை விபசாரத்தில் ஈடுபடுத்துவோர் அவர்களை போதைப் பொருட்களுக்குப் பழக்கப்படுத்தி விடுகிறார்கள். அவர்களை காம வாடிக்கையாளர்களை நோக்கி வலை வீசித் திரியும் விபசாரிகளில் பலர் மிக இளம் வயதிலேயே இந்தத் தொழிலுக்கு வந்து விட்டவர்களே!

மென்மேலும் பல இளம் பெண்களும் சிறுவர்களும் தினமும் விபசாரத்திற்கு அறிமுகமாகி வருகிறார்கள். முன்னை விட இப்போது இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆனால் விபசாரம் செய்ய வேண்டும் என்று எந்தப் பெண்ணும் இத் தொழிலில் சிறு வயதிலேயே இறங்குவதில்லை. நமது சமூகக் கட்டுக் கோப்பில் காணப்படும் விரிசல்களே இப் பெண்களை விபசாரிகளாகவும் போதைவஸ்துப் பிரியர்களாகவும் மாற்றி விடுகின்றன.

மத்திய வங்கி, மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்து வரும் திருமணமான பெண்களின் குடும்பங்களைப் பற்றி சமீபத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டது. அப்போது பெரும்பாலான குடும்பங்கள் அமைதியிழந்திருக்கும் உண்மை தெரியவந்தது.

வயதுக்கு வந்த பெண்களை வீட்டில் விட்டு விட்டு சீதனப் பணம் கொண்டுவர வீட்டுத் தலைவியர் வெளிநாடு சென்றதும் பெண்கள் தமமிஷ்டப்படி போல நடக்கத் தலைப்பட்டு படுகுழிகளில் வீழ்வதும் இரண்டாண்டு பிரிவைத் தாங்க முடியாத கணவன் வேறு பெண்ணுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதும் இக்குடும்பங்களில் பரவலாக நடைபெறும் சம்பவங்களாகும்.

பெண்கள் இளம் வயதிலேயே சீரழிந்து போவதற்கு போதைப் பழக்கத்திற்கு ஆளாகிப் போவதற்கும் குடும்பத் தலைவியர் வெளிநாடுகளுக்கு தொழில் பார்க்கச் செல்வதும் ஒரு காரணம்.

வறுமைமிக்க குடும்பங்களிலும் ஒழுக்கக்கேடான விடயங்கள் நடைபெறுகின்றன. இக் குடும்பங்களில் கணவனும் மனைவியும் சதா மோதிக் கொள்வதும் பிரிந்து செல்வதும் பெற்றோர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைக்குச் செல்வதும் சாதாரணமாக நடைபெறுகிறது.

இதனால் இக்குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் திக்குற்றுப் போய் விபசாரத்திலும் பின்னர் போதை மருந்து பாவனையிலும் மூழ்கிப் போகின்றனர்.

[illegible] நகரங்களை நோக்கி வரும் பசி வயிறு கொண்ட பெண்கள் வீட்டு வேலையாளராக நகர்ப்புறங்களில் பணியாற்றும் பெண்கள் ஆகியோர் இளம் வயதிலேயே ஆண்களின் முரட்டு அணைப்பில் தம்மை இழந்து விடுவது வெகு சாதாரணம். இவர்கள் மெள்ள மெள்ள பின்னர் விபசாரத்தில் இறங்கி விடுகின்றனர்.

பெரிய இடத்துப் பெண்களும் கூட போதைப் பழக்கத்தில் ஊறிப் போயிருக்கிறார்கள். ஆனால் இவை வெளியே தெரிய வருவதில்லை. இவர்களிடம் பணம் இருப்பதால் இது யாருக்கும் பிரச்சினையாக தெரிவதில்லை.

மேலும் இப்பெண்கள் தெரிந்தே இப்பழக்கத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் ஏழைக் குடும்பத்தின் இளம் பெண்கள் கானல் நீரை நோக்கி ஓடுவதாலேயே விபசாரத்திலும் போதைப் பொருள் பாவனையிலும் மூழ்கிப் போவது பரிதாபகரமானது.

(ம—032)



## ஆண்களை விட பெண்கள் வேலை செய்யும் நேரம் அதிகரிக்கிறது

நாடு முன்னேற ஆண்களை விட பெண்கள் அதிக நேரம் வேலை செய்கிறார்கள்! சிலதுறைகளில் பெண்கள் அதிக அளவில் வேலை செய்கிறார்கள்!

1917ஆம் ஆண்டுக்குப் பிறகு ரஷ்யாவில் பெண்களுக்கு உரிமைகள் ஆண்களுக்குச் சமமாக வழங்கப்பட்டன. தொழில்துறை முயற்சிகளிலும் பெண்கள் புரட்சிக்குப் பின்னர் கூடுதலாக பங்கெடுக்க ஆரம்பித்தனர். யுத்த காலத்தின் போது அதிகமான ஆண்கள் யுத்த களத்திற்குச் சென்ற போது பெண்கள் ஆயுதத் தொழிற்சாலைகளில் கடமை புரிந்தனர்.

யுத்தம் 2 கோடி ரஷ்யர்களை (ஆண்களை) பலிகொண்டது. இதனால் இந்த இடங்களில் இவர்கள் கடமைபுரிந்த இடங்களில் பெண்கள் கடமை செய்ய ஆரம்பித்தனர்.

கணிப்பீடுகளின் பிரகாரம் சோவியத்நாட்டின் பொருளாதார முயற்சி நடவடிக்கைகளில் 50க்கும் அதிகமானோர் பெண்கள். 10—6 என்ற வீதம் உயர்கல்வி பெற்ற பெண்களாவர். டாக்டர்களில் 80 சதவீதமானோரும் பெண்கள். வேலை செய்யும் நேரங்களிலும் பெண்களே கூடுதலான இடத்தை வகிக்கின்றனர்.

70 சதவீதமான சோவியத் பெண்கள் திருமணத்திற்குப் பின்னர் தமது துறையில் விசேஷ பயிற்சி பெறத் தவறுகின்றனர். இதனால் அவர்களில் 25 சதவீதமான சம்பளத்தைக் குறைவாகப் பெறுகின்றனர்.

குடும்பப் பொறுப்புள்ள பெண்களுக்குத் தமது குடும்ப விவகாரங்களைக் கவனிக்கவும் விசேஷ சலுகைகள் அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்படுகின்றன.

[ம]

## மாமியாரைப் பார்த்தா மனைவியைத் தேடுவது?

# மாமியாரைப் பார்த்தா மனைவியைத் தேடுவது?

மனைவியை விவாகரத்து செய்து விட்டு ஒரு இளைஞர் மாமியை திருமணம் செய்து கொண்ட சம்பவம் அண்மையில் அமெரிக்காவில் நடந்துள்ளது.

கொலினின் மனைவி கிமமிற்கு வயது 17. கிமமின் தாயான லட்போட்டின் வயது 45. கொலினுக்கு வயது 27.

கிமமும், கொலினும் காதலித்து கல்யாணம் செய்து கொண்டவர்கள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.

கிமமிற்கு இரண்டாவது குழந்தை பிறந்த பொழுது காதல் வாழ்வு கசப்பாக தோன்ற ஆரம்பித்தது. இருவருக்குமிடையில் சச்சரவுகள் ஏற்பட்டன.

ஆகவே இருவரும் விவாகரத்து கோரினார்கள். விவாகரத்து கொடுக்கப்பட்டது.

பிரிந்து இருந்த ஜோடியை ஒன்றிணைக்க மாமி பல முயற்சிகளை எடுத்தார்.

மருமகன் கொலினை அடிக்கடி தனிமையில் சந்தித்தார். இரவு நேரங்களில் மணித்தியாலக் கணக்கில் உரையாடினார்கள்.

இது மூலமாக மாமியைக் காதலிக்க ஆரம்பித்தார் மருமகன்.

காதல் வியாதி பொல்லாதது. மாமியும், மருமகனும் ஒன்றாக இணையும் வாய்ப்புகள் பலமாகி விட்டன.

இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள். திருமணம் நடைபெற்றது.

இக்கல்யாணத்திற்கு, மகளும் வந்திருந்தார். அவர்களுக்கு ஆசிகளை கண்ணீருடன் சொன்னார். கொலினின் கன்னத்தில் தாயும், மகளும் ஒரே நேரத்தில் முத்தம் வைத்தார்கள். ஆனால் மகள் கண்ணீரினால் முத்தம் வைத்தார்.

கல்யாணத்திற்கு வந்தவர்கள் கொலினிடம் இத்திருமணத்தைப் பற்றி சுமுகமாக பேச ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது கொலின் என்ன கூறினார் தெரியுமா? மனைவியின் அழகைவிட மாமி அழகாய் இருக்கிறாள் என்றார்.

ஆனால் இப்பொழுது இம் மூவரும் சந்தோஷமாக ஒரே வீட்டில் வாழ்கின்றார்கள்.

(ம—455)

ளுக்கு அடிமையானவர்களே!

இதற்குக் காரணம் உண்டு. இளம் பராயத்தினரை விபசாரத்தில் ஈடுபடுத்துவோர் அவர்களை போதைப் பொருட்களுக்குப் பழக்கப்படுத்தி விடுகிறார்கள். ..ர்களை தாம் சொன்னபடி ஆட்டுவிக்கலாம் என்பதாலேயே போதைப் பொருட்கள் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதற்கு அடிமையானதும் போதைப் பொருட்களுக்காக வேண்டி இச் சிறுவர்களும் சிறுமியரும் எதை வேண்டுமானா செய்யத் தயாராகவிருக்கிறார்கள்.

இன்று வீதியோரங்களிலும் செல்வந்தர்களும் வெளிநாட்டவர்களும் நடமாடும் ஹோட்டல்கள் கடற்கரையோரங்கள் சூதாட்ட விடுதிகள் போன்ற இடங்களிலும் பெண்கள் இளம வயதிலேயே சீரழிந்து போவதற்கு போதைப் பழக்கத்திற்கு ஆளாகிப் போவதற்கும் குடும்பத் தலைவியர் வெளிநாடுகளுக்கு தொழில் பார்க்கச் செல்வதும் ஒரு காரணம்.



# போதைப் பொருளுக்கு அடிமையாகும் சிறார்கள்

இலங்கையில் அதிகமான பாடசாலை, மாணவ மாணவிகள் ஹெரொயின் என்னும் போதைப்பொருளுக்கு அடிமைப் பட்டு இருக்கிறார்கள்.

பெரிய இடத்து பிள்ளைகளும், இந்த ராஜபோதைக்கு அடிமையாக இருக்கின்றார்கள். குடும்பங்களில் அமைதியின்மையை ஏற்படுத்தி உள்ளார்கள்.

இந்தப் போதைக்காரர்கள் குற்றங்களை செய்ய அஞ்சுவதில்லை. இவர்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி திருட்டுகளில் ஈடுபட்டுள்ளார்கள். சமூகத்தையே சீரழித்துக் கொண்டு வரும் சீர்கெட்ட நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள், என்று போதைவஸ்து தடுப்பு நிறுவனத்தின் அறிக்கை கூறுகின்றது. இதைப் பொலீஸ் அறிக்கைகளும் உறுதிப்படுத்துகின்றன.

ஹெரொயினில் இரண்டு வகை உண்டு. ஒன்று வெள்ளை சுகர் என்று கூறப்படும். வெள்ளைத் தூள். இன்னொன்று "பிரவுன்" சுகர் என்று சொல்லப்படும் பழுப்பு நிறத்தூள். வெள்ளையை விட வலை குறைவானதாகும். பிரவுன் சுகர் கலப்படம் நிறைந்தது, இதன் விலை குறைவு.

இதனால் பிரவுன் சுகர் மாணவர்களுக்கிடையில் அதிகமாக வரவேற்கப்படுகின்றது, நாட்டின் வருங்கால தூண்களை உருப்படி இல்லாமல் செய்து வருகின்றது.

இதை சூடுபடுத்தி சிலர் அதன் புகையை சுவாசித்தால் போதை ஏறும்.

இன்னும் சிலர் சிகரெட்டின் தூள்களை கொட்டி விட்டு அதற்குப் பதில் இந்தப் பவுடரை உள்ளே செலுத்தி சிகரெட்டை புகைக்கின்றார்கள்.

இன்னும் சிலர் இந்தப் பவுடரை தண்ணீரில் கரைத்து ஊசி மூலம் உடம்பில் செலுத்தி போதையை ஏற்றிக்கொள்கிறார்கள். முதலில் அரை கிராம் பிறகு முக்கால கிராம், அதன் பிறகு ஒரு கிராம், என்று நாள்தோறும் போதையை உண்டாக்கி கொள்கின்றார்கள்.

இந்த முறை தொடருமேயானால மூச்சடைத்து சாக வேண்டியதுதான்.

மற்றபோதைகளுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? சாராயம், விஸ்கி, கள் போன்றவைகளும் போதைவஸ்துகளே. இவைகளை ஒரு குறிப்பிட்ட அளவு அருந்தினால் போதுமென்ற மனப்பான்மை தோன்றும். ஹெரொயின் போதைக்கு அளவுமில்லை. முடிவுமில்லை.

(ம—455)

# கன்னியரின் பார்வைக்கு அர்த்தங்கள் எத்தனையோ?

கன்னியரின் பார்வைக்கு அர்த்தங்கள் எத்தனையோ உண்டு. ஆனால் அந்த அர்த்தங்களை உணர்வது எப்படி?

* ஒரு ஆணை மனதார நேசிக்கும் பெண் நேரடியாக அவன் முகத்தைப் பார்க்க மாட்டாள்!

* அவன் அவளைப் பார்க்கும் போது நாணமடைவாள்!

* ஆண் தனித்திருக்கும் பொழுது அவன் பாராத போது ரகசியமாகப் பார்ப்பாள்!

* ஆண் அவளிடம் ஏதும் கேட்டால் இளநகை செய்வாள்!

* தரையைப் பார்த்தபடி இனிய குரலில் தொடர்பற்ற, தெளிவற்ற வார்த்தைகள் பேசுவாள்.

* நீண்ட நேரம் ஆண் அருகில் இருப்பதை விரும்புவாள். ஏதாவது சாக்கு வைத்து இடம் நகரமாட்டாள்!

* குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு அவன் எதிரில் அணைத்து முத்தம் கொடுப்பாள்!

* காதலனைக் கவர, விசித்திர தொனியில் பேசுவாள். காதலனைப் பற்றி யாராவது பேசினால் கவனமாகக் கேட்பாள்!

* அவன் பரிசாகக் கொடுத்த ஆபரணங்களை எப்போதும் அணிந்திருப்பாள்!

[ம—10]

## சமையற்கலை

### முட்டை சம்பல்

தேவையான பொருட்கள்

முட்டை — 2
பெரிய தக்காளி — 2
பச்சை மிளகாய் — 2
மாஜரீன் — 2 மேசைக்கரண்டி
மிளகாய்ப்பொடி — 1 தேக்கரண்டி
தேவையான அளவு உப்பு.

செய்முறை —

தக்காளி, பச்சை மிளகாய் இவற்றை பொடியாக நறுக்கி வைக்கவும். வாணலியில் மாஜரீனை ஊற்றி நன்றாகக் காய்ந்ததும் முட்டையை உடைத்து வாணலியில் ஊற்றி அதன் மேல் நறுக்கி வைத்த பொருட்கள், மிளகாய்ப் பொடி, தேவையான உப்பு இவற்றைப் போட்டு கரண்டியால் நன்றாகக் கடைந்து முட்டை வெந்ததும் இறக்கி பரிமாறவும். பாண், ரொட்டியுடன் முட்டை சம்பலை சேர்த்து சாப்பிடலாம். சுவையாக இருக்கும்.

# ஒலி ஒளி உருவம்

RUPAVAHINI

## சிட்டி எப்எம் ஸ்டீரியோவும் எட்டி எட்டிப் போகிறதாம்

அறுவைக்கொரு "ஆயுபோவன்" ஆரம்பத்தில் அறிமுகமானது போல் —

இன்று சிட்டி எப் எம ஸ்டீரியோவும வானொலி ரசிகர்களின் ரசனையிலிருந்து எட்டி எட்டிப் போகிறது!

இதுவும போதாதென்று காலை ஒலிபரப்பும ஸ்டீரியோவில் பொறுமையைச் சோதிக்கிறது!

தமிழில் "அறுவை விளக்குங்"களைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாத காரணத்தாலேயே இன்று வானொலி ரசிகர்கள் வழக்கும போல "பொங்கும பூமபுன"லையே நாடுகிறார்கள்!

இனிமையான இசை கேட்க விரும்புபவர்களை இப்படியா சோதிக்க வேண்டும?

இவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பதற்குக் காலையும மாலையும இப்படியும ஒரு அறுவைச் சேவை தேவைதானா?

எவ்வளவோ எதிர்பார்த்த ஒரு நல்ல நிகழ்ச்சி இவ்வளவு சீக்கிரமாக இப்படியொரு ஏமாற்றத்தையா தர வேண்டும?

தமிழ்ப் பாடல்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இப்படியும ஒரு இழுவையா?

பொறுமைக்கும ஒரு எல்லையுண்டு — ஆகவே தான் வானொலி ரசிகர்களின் வெறுப்புக்காளாகிறது சிட்டி எப் எம ஸ்டீரியோ! ஆங்கில அறிவிப்பாளர்கள் மட்டுமதான் "ஷோர்ட் அன்ட் ஸ்வீட்"டாகப் பேசி அக மகிழ்வைத் தருகிறார்கள்!

நறுக்குத் தெறித்தாற் போன்ற குற விளக்கங்களுடனான அருமையான பாடல்களைத் தான் நேயர்கள் விரும்புகிறார்கள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம!

அத்துடன் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி அறிவிப்பாளர்களையும மாற்ற வேண்டும?

இனியும வேண்டாம இப்படி நிகழ்ச்சி — இதயங்கள் மலரத் தர வேண்டும இசை மகிழ்ச்சி!

## சபாஷ் — சரியான போட்டிதான்!

"மரிக்கார்" என்றதுமே உடனே நம ஞாபகத்துக்கு வருபவர் எஸ் ராமதாஸ்தான்!

அவருடைய கொச்சைப் பேச்சுத் தமிழில் இச்சை கொள்ளாதோர் இருக்கவே முடியாது!

அவருடைய பாணியிலே ஒரு சில நகல்கள் நம மத்தியிலே இன்று ந(ா)ட(க)மாடினாலும முதலாவதாக அறிமுகமான அசல் — அசலே தான்!

வானொலியின் "கோமாளிகள்" மூலம அறிமுகமான இக் கதாபாத்திரம (மரிக்கார்) வாஹினி - சினிமா மூலமும புகழடைந்த ஒரு கதாபாத்திரமாகும!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும மக்கள் மத்தியில் சுயாதீன ஒளிபரப்பின் (ஐ டி என்) மூலம டிவி ரசிகர்களை மகிழ்ச்சியிலாழ்த்த வருகிறார் இந்த மரிக்கார்!

இவருடைய ஜோடி ஆயிஷாவாக மரிக்காரின் அதே பாணிப் பேச்சுத் தமிழில் பேசி நடிக்கிறார் மகேஸ்வரி ரெட்ணம!

சபாஷ்! சரியான போட்டி தான் — பொறுத்திருந்துதான் பார்ப்போமே?

இன மத மொழிக்கப்பாற்பட்ட கலைத்துறையில் போட்டி இருக்கத்தான் வேண்டும — ஆனால் அது பொறாமையாக மாறக் கூடாது!

## வால்மீகி ராமாயணம் வாஹினியிலும் வேண்டும்

சமஸ்கிருதத்தில் டெல்லியில் "வால்மீகி ராமாயணம்" நாட் ... சங்கர் பாடியுள்ளனர் - பி என் சுந்தரம ஒளிப்பதிவு செய்கிறார் —

# தந்தையின் குரலில் தனையன் பாடினார்

வாஹினியின் "கலையரங்கம" நிகழ்ச்சி இம்முறை (20-3-90) திரு எஸ் விஸ்வநாதனின் தயாரிப்பில் இசைத் தென்றலாகி மெல்லிசைப் பாடல்களை வழங்கி ரசிகர்களை எதிர்பாராத மகிழ்ச்சியிலாழ்த்தியது!

பிரபல தென்னிந்தியத் திரைப் படப் பின்னணிப் பாடகர் டி எம சௌந்தரராஜனின் மகன் டி எம எஸ் செல்வகுமாரும இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இரண்டு ஈழத்து மெல்லிசைப் பாடல்களையும இரண்டு தமிழ் சினிமாப் பாடல்களையும பாடி இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்!

இந்நிகழ்ச்சிக்கு இசை வழங்கினார் "சுப்பர் சித்தாரா" எஸ் கணேஷ்ராஜ்!

முதலாவதாக நம்நாட்டின் பிரபல கவிஞர் மேமன் கவி இயற்றிய — "அன்பின் பாடலைப் பாடு... அது அகிலம தன்னைக் காக்கும...

"கருணை மழையும பொழிக... அக பகைமை தன்னை ஒழிக்கும..." என்னும அருமையான கருத்துக்களடங்கிய மெல்லிசைப் பாடலைச் செல்வகுமார் மிகப் பிரமாதமாகவே பாடி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்!



டி எம எஸ் செல்வகுமார்

பாடுவது சௌந்தரராஜனா அல்லது செல்வகுமாரா என்றெண்ணி வியக்கும வண்ணம பாட்டுக்கொரு வாரிசாகவே திகழ்ந்தார் செல்வகுமார்!

அதிலும தந்தை பாடிய "படித்தால் மட்டும போதுமா" படப் பாடலான "நான் கவிஞனுமில்லை... நல்ல ரசிகனுமில்லை..." என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடலையும —

"கை கொடுத்த தெய்வம" படத்திலிருந்த "சிந்து நதியின் மிசை நிலவினிலே... சேர நன்னாட்டிளம பெண்களுடனே... சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து தோணிக்ளோட்டி விளையாடி வருவோம..." என்ற பாரதியாரின் பாடலையும அவர் பாடிய பொழுது மெய் சிலிர்க்காதவர்களே இருக்க முடியாது!

ஆம — அவ்வளவு அருமையாகத் தந்தையின் பாணியிலே பாடினார் செல்வகுமார்! குரல் கூட டி எம எஸ்ஸின் சாயலிலேயே ஒலித்து வியக்க வைத்தது!

இப்பாடலின் ஓரிடத்தில் "சிங்களத் தீவினுக்கோர் பாலம அமைப்போம" என்று அவர் பாடிய பொழுது... இப்பாடல் வரிகளை முன்பு கணிக்கை செய்த பாடல் ஒலிபரப்பியவர்களையும இதயம எண்ணத்தான் செய்தது!

"அந்தப் பாலம கலைப் பாலம" தான் என்பதைப் புரிந்து கொண்டவர்கள் இம்முறை பணியாற்றியதால்தான் அப் பாடலை முழுமையாகவே கேட்டு ரசிக்க முடிந்தது! அதற்காக விஸ்வநாதனைப் பாராட்டத்தான் வேண்டும!

மற்றும வி தெய்வநீசன் இயற்றி எஸ் கணேஷ்ராஜ் பாடிய "தந்தனைப் பாடும தங்கமே செண்பகமே" —

கலைநேசன் இயற்றி வி ஜெகதீசனை பல்லா ராஜசூரியரும பாடிய "விழிவரையும நாணம ஒரு புதுக்கவிதை..." —

கமலினி முத்துலிங்கம் இயற்றி டி எம எஸ் செல்வகுமார் பாடிய "வானம மண்ணில் பொன்னொளி சிந்த கதிரவன் தன்னை அவன் படைத்தான்" ஆகிய பாடல்களும "இசைத் தென்ற"லாகி இதயங்களை வருடி இனிக்கச் செய்தன!

கணேஷ்ராஜின் இசையில் மனங்கவர்ந்த இம மதுரகானங்களை மீண்டும ஒரு முறை மறுஒளிபரப்பாகத் தரும்படி வேண்டுகிறோம!

## தமிழ் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஞாயிறு — வளர்பிறை | 5—30 |
| பொன்மாலைப் பொழுது | 6—55 |
| திங்கள் — வண்ணசோலை | 5—30 |
| தமிழ்ப் பாடல்கள் | 6—55 |
| செவ்வாய் —கலையரங்கம | 6—55 |
| புதன் —இளையோர் அரங்கம | 5—30 |
| உரை நிகழ்ச்சி | 6—15 |
| சனி — தமிழ்ப்பாடல்கள் | 6—15 |

தயாரிப்பு: சஞ்ஜயன்

## இளையதலைமுறையினரின் இனிய தமிழ்ச் 'சங்கமம்'

கடந்த 17-3-90 சனிக்கிழமை மாலை வாஹினியில் ஒளிபரப்பான "சங்கமம" நிகழ்ச்சி — சுப்பர் டியூனேஸின் இசை வழங்கலில் எம விமல் பாடிய "பூவே பூச் சூடவா" பாடலுடன் ஆரமபமாகியது!

இளைய தலைமுறைக் கலைஞர்கள் எல்லாம காணக் கூடியதாக இருந்த இக்குழுவில் எல்லோருமே டிவி ரசிகர்களைக் கவர்ந்தார்கள் — குறிப்பாகக் கிற்றார் வாத்திய இளைஞர் நம கவனத்தை ஈர்த்தார்!




இரண்டாவதாகக் கண்ணத்துரை லோகேந்திரனின் தலைமையில் பமபலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களும பம்பலப்பிட்டி ஹோலிபமிலி கொன்வென்ட் மாணவிகளும கலந்து கொண்ட "பெண்கள் தொழில் பார்க்கலாமா? வேண் ...

## விதவைக்கு வாழ்வளிக்க விரும்பியவன் கதையிது!

காதலித்துக் கைப்பிடித்தவனை விபத்தில் இழந்து விதவைத் தாயாகிறாள் கதாநாயகி!

காதலிலே தோல்வியுற்ற காளையொருவன் சந்தர்ப்ப சூழ்நிலையால் கொலைக் குற்றவாளியாகித் தலைமறைவாக வாழ்கிறான்!

அவனுக்குத் தன் வீட்டுத் தோட்டத்திலே அடைக்கலம கொடுக்கும கதாநாயகி குங்குமமிழந்தவளாயினும அந்தக் குங்குமக் குணத்துக்கு ஒரு எல்லைக் கோடிட்டு வாழும விதவையாகவே காட்சியளிக்கிறாள்!



சுரேஷும நளினியும

இவர்களைச் சுற்றிச் சுழலும இக்கதையில் விதவைக்கு வாழ்வளித்து அவளது குழந்தைக்குத் தந்தையாக விரும்புகிறான் அவ் வாலிபன்!

குற்றவாளியைக் காட்டிக் கொடுக்கும கதாநாயகி - தன் ...

## பின்னணியில் பிரபாணந்தி

"உதயகீதம இதய நாதம்" எனும தலைப்பில் கடந்த வாரம இப்பகுதியில் பிரசுரமாகியிருந்த "உதயகீதம" நிகழ்ச்சி பற்றிய விமர்சனத்தில் —

பாலமுரளி பாடிய "பூந்தென் ...



## வால்மீகி ராமாயணம் வாஹினியிலும் வேண்டும்

சமஸ்கிருதத்தில் டெலிபிலிம் "வால்மீகி ராமாயணம்" நாட்டிய நாடகமாகத் தயாராகிறது-இந்திய டெலிவிஷன் "தூரதர்ஷ"னில் இது ஒளிபரப்பாகும்!

நூறு நிமிடங்கள் ஓடக்கூடிய இதில் வால்மீகி முனிவரின் ராமாயண காவியத்திலிருந்து சில சுலோகங்கள் அப்படியே இடம்பெறுகின்றன-

எல் வைத்தியநாதன் இசை அமைக்கிறார்! பாலமுரளி கிருஷ்ணா - பி சுசிலா - லட்சுமி சங்கர் பாடியுள்ளனர்- பி என் சுந்தரம ஒளிப்பதிவு செய்கிறார்-பி கிருஷ்ணமூர்த்தி இதன் ஆர்ட் டைரக்டர்-

திரைக்கதை அமைத்து இயக்கியிருப்பவர் கே எஸ் ஸ்ரீனிவாசன்-

இவர் வால்மீகி - கம்ப ராமாயணங்களை மேடைகளில் நாட்டிய நாடகங்களாகத் தயாரித்து அரங்கேற்றியுள்ளவர்-

இந்த நாட்டிய நாடகத்தை தூரதர்ஷன் டிவி நிலையத்தாரிடமிருந்து தருவித்து வாஹினியிலும ஒளிபரப்ப வேண்டுகிறோம-



வால்மீகி ராமாயணத்தில் இராமர் — இலட்சுமணன்

...துரை லோகேந்திரனின் தலைமையில் பமபலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களும் பம்பலப்பிட்டி ஹோலிபமிலி கொன்வென்ட் மாணவிகளும் கலந்து கொண்ட "பெண்கள் தொழில் பார்க்கலாமா? வேண்டாமா?" என்ற விவாதம விறுவிறுப்பாகவே அமைந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தது!

போட்டி நிகழ்ச்சிகளைத் தவிர்த்து இப்படியான விவாதங்களைச் "சங்க"மத்தில் தருவது மாணவ மாணவிகளின் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு நல்ல வாய்ப்பாகும!

"உதயகீதம இதய நாதம்!" எனும தலைப்பில் கடந்த வாரம இப்பகுதியில் பிரசுரமாகியிருந்த "உதயகீதம" நிகழ்ச்சி பற்றிய விமர்சனத்தில் —

பாலமுரளி பாடிய "பூந்தென்றலே நீ பாடி வா... என் நெஞ்சிலே பண்பாட வா..." என்ற பாடல் வரிகளுடன் பின்னணியில் இணைந்தொலித்த அந்த இனிமையான "ஹம்மிங்" குரலுக்குரிய பெண் யார்? அந்தக் குரலுக்குரியவரையும நிகழ்ச்சியில் காட்டியிருக்கலாமே?" என்று கேட்டிருந்தோம!

அந்தப் பெண் குரலுக்குரியவர் வேறு யாருமல்லர் — எற்கனவே வாஹினி ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான இளம பாடகி செல்வி பிரபானந்தி அருணாசலமதான் என்பது தெரிய வந்துள்ளது! அவரது வாஹினி நிகழ்ச்சிப் பாடற் காட்சி ஒன்றையே இங்கு காண்கிறீர்கள்!



பிரபானந்தி

இவர்களைச் சுற்றிச் சுழலும இக்கதையில் விதவைக்கு வாழ்வளித்து அவளது குழந்தைக்குத் தந்தையாக விரும்புகிறான், அவ் வாலிபன்!

குற்றவாளியைக் காட்டிக் கொடுக்கும கதாநாயகி - தண்டனைக்குப் பிறகு வரும அவனுக்காகத் தன் வீட்டுக் கதவுகள் மட்டுமின்றி தெயக் கதவும திறந்திருக்கும என இயமபுகிறாள்!

இதயத்தைத் தொடும இக்கதையில் மோஹன் - நளினி சுரேஷ் - ரமயா கிருஷ்ணன் ஆகியோர் பாத்திரமுணர்ந்து பாராட்டும்படியாகவே நடித்திருந்தனர்-

பாஷை புரியாத சிங்கள ரசிகர்கள் கூடக் கடந்த 16-3-90 வாஹினியில் ஒளிபரப்பான "குங்குமக்கோடு" தமிழ்ப் படத்தைப் பார்த்து நன்கு ரசித்து மகிழ்ந்தார்கள் என்பதற்கு அவர்களது விமர்சனங்களே சான்றாகும!

## கவரும் கானம்

### எனை வந்து தழுவ ஏனிந்தப் பிரிவு?

(ஆண்) குருவாயூரப்பா குருவாயூரப்பா குருவாயூரப்பா குருவாயூரப்பா... நான் கொண்ட காதலுக்கு நீ தானே சாட்சி!

(பெண்) குருவாயூரப்பா குருவாயூரப்பா... வேண்டாத தெய்வமில்லை நீ தானே பாக்கி!

(ஆண்) ராதை உனக்குச் சொன்ன வேதம என்ன... நான் போகும பாதை என்னாளும உன் பாதை!

(பெண்) குருவாயூரப்பா குருவாயூரப்பா நான் கொண்ட காதலுக்கு நீ தானே சாட்சி!

(ஆண்) தேனாற்றங் கரையில் தெய்வீகக் குரலில்... நான்தான் ஒரு பாட்டிசைத்தேன்!

(பெண்) தினந்தோறும இரவில் நடுஜாமம வரையில்... நான்தானே அதைக் கேட்டிருந்தேன்!

(ஆண்) அரங்கேற்றமதான் ஆகாமல்தான்... அலை பாயும என் ஜீவன்தான்!

(பெண்) வா வா என் தேவா செமபூவா என் தேகம... திராதோ உன் கைகளிலே!

(ஆண்) குருவாயூரப்பா குருவாயூரப்பா... நான் கொண்ட காதலுக்கு நீ தானே சாட்சி!

(பெண்) ஏகாந்த நினைவும எறிக்கின்ற நிலவும... என் மேல் ஒரு போர் தொடுக்க...



(ஆண்) எனை வந்து தழுவ ஏனிந்தப் பிரிவு மானே... வா உன்னை யார் தடுக்க!

(பெண்) பரிமாறலாம பசியாறலாம... பூமாலை நீ சூடும நாள்!

(ஆண்) மாது உன் மீது இப்போது என் மோகம... நான் யாரோ சொல்லு பூங்குயிலே!

(குருவாயூரப்பா)

★

இப்பாடலை இயற்றியவர் கவிஞர் வாலி — இசையமைத்தவர் இளையராஜா — பின்னணி பாடியவர்கள் பாலசுப்பிரமணியம...சித்ரா — பாடல் காட்சியில் நடித்தவர்கள் ரகு (ரகுமான்)... பைரவிகீதா - படம "புதுப்புது அர்த்தங்கள்"-

இப்பாடல் வரிகளை விருமபியவர்கள் தெமட்டகொடையைச் சேர்ந்த வசந்தி * சாந்தி * ரதி * வினோ * தர்ஷி * மங்கலி — கமபளைவத்தை கமபளையைச் சேர்ந்த ஐயூப்கான் * உவைஸ் * இமதியாஸ் * முபாரக் * நிமஷாட் * பஷீர் — ரமபுக்-எலயைச் சேர்ந்த பௌஸர் * பாரூக் * மர்சூக் * மஸீனா — படுகொட பர்ஸானா * பஸான் * பஸீனா — யாழ்ப்பாணம ரஞ்சிதமலர் * தேவி * செல்வராணி — பதுளை ரஞ்சனி * பிரபா * ராணி — மாத்தளையைச் சேர்ந்த ஹமாயுன் கபீர் ஷியாம * இதயமலர் * றெளிஹாஜ் - உக்குவளை ஆ பாரிஸ்டர்!

### கனவில் நினைவில் அழகிய முகம்!

பூந்தென்றலே நீ பாடி வா... என் நெஞ்சிலே பண்பாட வா...

கண்ணோடு உறவாடும உன் ரூபமே... மன வீணையில் உன் ராகமே... என்னோடு சேர வா வா... (பூந்தென்றலே)

உன் பாடல் தேடி என் ஜீவன் வாடும... ஒரு பாடல் நீ பாட வா...

தாலாட்டுப் பாடும பொன் வானம நானே... நிலவாக நீ இல்லையே...

உன் பார்வை எந்தன் வரமாக வேண்டும... நீயே ஜீவகானம...

தேவியே உனைத் தேடியே நிழலாக தொடர்கின்றதே...

அனுதினமும நினைவுகளே இதயமதில் ஸ்வரம மீட்டுமே... (பூந்தென்றலே)

வளையோசை நாதம கேட்டாலும ராகம நதி போல உருவாகுமே...

விழியாலே காதல் மொழி ஒன்று போதும... ஒரு கோடி இசை பாடுவேன்...

மண் மீது வீந்த பொன் வீணை நீயே... ஏனோ மௌனயாகம...



பூவிலும முகம் பார்க்கிறேன்... உயிரென்றும உன்னோடு தான்...

கனவிலும அழகு முகம... நினைவினிலும தொடர்கின்றதே... (பூந்தென்றலே)

★

இப்பாடலியற்றிப் பாடியவர் என் பாலமுரளி — இசை எம எஸ் செல்வராஜா - பாடல் இடமபெற்ற நிகழ்ச்சி வாஹினியின் "உதயகீதம"-

## டெலிவிஷன்

/ 25—3—1990

### ரூபவாஹினி

3-00 கிலெட் வேள்ட் ஸ்போட்ஸ்
4-00 ராசர
5-00 முத்துஹர
5-30 வளர்பிறை
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-30 செய்திகள் — தமிழ்
6-55 பொன்மாலைப் பொழுது
7-25 ஸ்மோல் வொண்டர்
8-00 செய்திகள் - சிங்களம்
8-30 அசே மதுர கீ
9-00 செவன விமன
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 உலக கிண்ண கிரிக்கெட் (ஆஸ்திரேலியா — பாகிஸ்தான்)

### ஐ. டி. என்.

11-00 லொஸ்ட்ரன்
11-30 பிரெஞ்சு பாட வகுப்பு
12-00 வண்ணப் பூக்கள்
12-30 விசித்ரகீத்த
1-00 முத்துச்சரம
1-30 தேன் துளிகள்
2-00 ஒளிபரப்பு முடிவு

சேவை 2

5-00 புட்போல் மேட் இன் ஜேர்மனி
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி
6-30 ரச மியுரு
7-00 சுப பிரார்த்தனா
7-30 வெரைட்டி பெயார்
8-00 லெட் தெயார் பீ லவ்
8-30 செய்திகளும கருத்துக்களும
9-00 சுவி ரச மிஹிர
9-30 டெரிக்
10-00 செய்திகள் - ஆங்கிலம
10-26 டெரிக் (தொடர்ச்சி)

சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

சிந்தாமணி CHINTAMANI



# இருந்தபடி பந்தடிக்க தயாராகும் வீரர்கள்!

வலது குறைந்தவர்கள் தமது உடற்குறையை எண்ணி வருந்தாது சாதாரண வாழ்க்கை வாழ வேண்டும் என்பதால் விஞ்ஞானிகள் அவ்வப்போது புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய வண்ணம் இருக்கிறார்கள்! படத்தில் காணப்படும் சக்கர நாற்காலியும் அப்படியான ஒரு புதிய கண்டுபிடிப்புத்தான்!

வலது குறைந்த விளையாட்டு வீரர்கள் சக்கர நாற்காலிகளில் அமர்ந்தவாறே பல விளையாட்டுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்! ஆனால் பச்சைப் புல் மற்றும் மண்தரை அரங்குகளில் மட்டும்தான் இவர்கள் ஆட்டங்களில் ஈடுபட முடியும்! உள்ளரங்குகளில் அல்ல!

உள்ளரங்குகளில் விரிக்கப்பட்டுள்ள செயற்கைக் கம்பளத் தரையை உருண்டோடும் சக்கரங்கள் பாதித்து விடும் என்பதால் சக்கர நாற்காலிகளுக்கு உள்ளரங்குகளில் அனுமதி இல்லை!

இக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் உள்ளரங்கு கம்பளத் தரையை பிய்த்துப் பிடுங்காத புதிய சக்கர நாற்காலிகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன! இதனால் உள்ளரங்கு விளையாட்டுகளிலும் உற்சாகமாக இனி மேல் வலது குறைந்தவர்கள் கலந்து கொள்ள வழி ஏற்பட்டுள்ளது!

[ம—032]

# மந்திர சக்தி மிக்க ஜின் செங் வேர்!

சீனர்களால் மிகவும் விரும்பப்படும் ஒரு வேர் ஜின்செங். மனிதனின் விருப்பம் என்பது இதன் பொருளாகும். சீனா, கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஜின்செங் செடி வளர்கிறது. ஆனால் சீனர்களும் ஜப்பானியர்களும் இவ்வேரை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மூலிகையாகக் கருதிப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தத் தென் கிழக்கு ஆசிய மக்களுக்கு என்று சில அசைக்க முடியாத நம்பிக்கைகள் இருக்கின்றன. காண்டாமிருகக் கொம்பு, ஒரு வகை ஓணான் உட்பட சில பொருட்களுக்கு காம வீரியத்தை அதிகரிக்கும் சக்தி உண்டு என்று இம்மக்கள் நம்பி வருகிறார்கள்.

இவற்றுக்கு உண்மையில் அப்படியொரு சக்தி இல்லை என்பது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டிருந்த போதிலும் இம்மக்கள் தமது நம்பிக்கையைக் கைவிடுவதாக இல்லை.

ஜின்செங் வேருக்கு இப்படி ஒரு சக்தி இருப்பதாக சீனர்கள் நம்புகிறார்கள். ஜின்செங் வேரைப் பொடி செய்து பானமாக அருந்தினாலோ அல்லது வேக வைத்து கஷாயமாகக் குடித்தாலோ பல்வேறு நோய்கள் பறந்து போகும், தேய்ந்து விட்ட காம வீரியம் தட்டி எழுப்பப்படும் என்றும் சீனர்கள் நம்புகிறார்கள்.

ஜின்செங் பொடியை வயதானவர்கள் நம்பிக்கையுடன் பயன்படுத்தி வருகிறார்கள். மகரந்தப் பொடி (பொல்லன்)யுடன் ஜின்செங் வேரையும் சேர்த்து சந்தைக்கு விடப்படும் மாத்திரைகள் திருமணமானோரிடம் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

இம்மாத்திரைகள் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தாலும் கூட வாடிக்கையாளர்கள் அள்ளிக் கொண்டு போகவே செய்கிறார்கள்.

ஜின்செங் கவனமாக போற்றி வளர்க்கப்பட வேண்டிய ஒரு தாவரம். அமெரிக்காவின் வர்ஜீனியா மற்றும் கென்டக்கி பகுதிகளில் ஜின்செங் அமோகமாக வளர்கிறது. இப்போது உலக மக்களுக்கும் இவ்வேரின் மீது பிடிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான உற்பத்தி சீனாவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஜின்செங் வேர்விட்டு வளர்ந்து முதிர்ச்சி அடைய நான்கு ஆண்டுகள் தொடக்கம் ஏழு ஆண்டுகள் வரை செல்லும். இவ்வேரின் தோற்றம் விசேஷமானது.

நன்றாக வளர்ந்த ஒரு ஜின்செங் மனித உருவத்தைக் கொண்டதாக இருக்கும். கைகளை விரித்துக் கொண்டிருப்பது போலவும் ஓடுவது மற்றும் பாய்வது போலவும் இவ்வேர் காணப்படுவது வழக்கம்.


ஒரு நோயாளியின் கால் நோயால் பாதிக்கப்பட்டு நடமாட அவர் சிரமப்பட்டுக் கொண்டிருப்பாரானால், ஓடுவது அல்லது பாய்வது போன்ற தோற்றம் கொண்ட ஜின்செங் வேரைப் பயன்படுத்தி சீன வைத்தியர் கசாயம் தயாரிக்கிறார்கள்.

அதை நோயாளிக்குக் கொடுக்கிறார்கள். தலை பாதிக்கப்பட்டிருக்குமானால் மனிதத் தலை வடிவத்தை விசேஷமாகக் கொண்ட வேரும், கைகளில் வியாதி இருக்குமானால் கை உருவத்தை விசேஷமாகக் கொண்ட வேரும் மருத்துவர்களால் பயன்படுத்தப்படும்.

இவ்வேர் ஒரு சகல நோய் நிவாரணி என்பதும் மருத்துவக் குணத்தைத் தவிர அதீத ஆற்றலும் கொண்டது என்றும் சீன மருத்துவர்கள் கருதுகிறார்கள்.

பண்டைய சீன பிரபுக்களும் மன்னர்களும் ஜின்செங்கை தமது வீட்டுத் தோட்டத்தில் பாதுகாத்து வளர்த்து வந்தனராம். சீன மற்றும் ஜப்பானிய சக்கரவர்த்திகள் தமது கைப்பட இத்தாவரத்துக்கு நீரூற்றி வளர்த்து வந்தனராம்!

இப்போது ஜின்செங் பல்வேறு நாடுகளில் அதன் வர்த்தக சந்தை வாய்ப்புகளைக் கருதி பயிரிடப்பட்டு வருகிறது. இஸ்ரவேலியர்களும் கூட கோலான்



மலைப் பிரதேசத்தில் ஜின்செங்கைப் பயிரிட ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு பயிரிடப்பட்ட முதல் தொகுதி ஜின்செங் இவ்வாண்டில் தோண்டியெடுக்கப்படவுள்ளது.

பல நாடுகள் ஜின்செங் வேரை அமெரிக்கா, சீனா, தாய்வான், கொரியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து அதை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு பொருட்களைத் தயாரிக்கின்றன.

முகப்பரு கிறீமில் இருந்து ஆண்மை வீரிய மருந்து வரை ஜின்செங் வேரைத் தாங்கிய பல்வேறு பொருட்கள் விற்பனைக்கு விடப்படுகின்றன.

ஜின்செங் வேரை உள்ளடக்கிய விஸ்கி அல்லது பிராண்டி பானங்களும் தயாரிக்கப்படுகின்றன. பலவேறு நாட்டுக் கரைகளில் இறங்கி பெண்களுடன் சல்லாபிக்கும் வாய்ப்புக் கொண்ட மாலுமிகள் ஜின்செங் அடங்கிய பொருட்களை விரும்பி உட்கொள்கின்றனர்.

(ம—032)

## மேயரின் குற்றம்

வாஷிங்டன் நகர மேயர் மீது போதைப்பொருள் பாவனை தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன— கறுப்பின மேயரான இவர் 1988 ஆம் ... போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார்!

கடந்த ஜனவரி மாதம் போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டின் கீழ் மேயர் கைது செய்யப்பட்டார்! இப்போது வழக்கு விசாரணையை எதிர்

## நாயை கொல்வது எப்படி?

நாயையோ பூனையையோ கறி சமைத்து உணவாகக் கொள்வது ஒன்றும் தவறான விஷயம் அல்ல. ஆனால் வலி தெரியாமல் மனிதா

## அரசியல்வாதியாக தைவான் கவர்ச்சி தாரகை

அமெரிக்காவில் தேசுன் இந்தியா வில எம ஜி ஆர பாணியில் தைவானில் நடிகையாக இருந்து அரசியலுக்கு வந்திருப்பவா ... யதற்காக அரசு தன்னைப் பழி வாங்கப் பார்ப்பதாக டான் கூறுகிறார்.

ஆளும் கோமின்டாங் கட்சிக்

## புற்று நோயால் வாடும் ஜனாதிபதி குடும்பம்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் குடும்பத்துக்கும் புற்று நோய்க்கும் முற்றார்— ஜிம்மி கார்ட்டரின் தாயார் லில்லியன் கார்ட்டர் கணைய புற்றுநோய் கண்டு 1983

போதைப்பொருள் பாவனை தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன— கறுப்பின மேயரான இவர் 1988 ஆம் ஆண்டின் போது மட்டும் நான்கு தடவைகள் கொக்கெய்ன் போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டின் கீழ் மேயர் கைது செய்யப்பட்டார்! இப்போது வழக்கு விசாரணையை எதிர் நோக்கியிருக்கிறார் இவர்!

[ம—032]


# தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84.



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை- தபால் பெட்டி இல 1613, வெளியிட்ட திகதி 25 மார்ச் 1990

"CHINTAMANI", 5, Gunasena Mawatha, Colombo — 12
P. O Box 1613


நாயையோ பூனையையோ கொன்று சமைத்து உணவாகக் கொள்வது ஒன்றும் தவறான விஷயம் அல்ல. ஆனால் வலி தெரியாமல் மனிதாபிமான விதத்தில் அவை கொல்லப்பட வேண்டும் என்பதே முக்கியம்!

இவ்வாறு கலிபோர்னிய மாநில நீதிபதி ஒருவர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்! இரு கமபோடியர்கள் ஒரு அல்சேஷன் நாயை கொன்று உணவாகக் கொண்டதை ஆட்சேபித்து ஜீவகாருண்ய சங்கம் ஒன்று கலிபோர்னிய நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது!

இவ்வழக்கை விசாரித்த பிரஸ்தாப நீதிபதி "பிராணி ஒன்றை உணவாக உட்கொள்ளும் வகையில் அதைக் கொல்வதில் தவறில்லை! அது தவறு என்றால் ஆடு மாடுகளை அறுக்கும் எல்லோரையும் அல்லவா சிறைக்கு அனுப்ப வேண்டியிருக்கும்" என்று சொல்லி விட்டு பிராணிகள் இம்சிக்கப்படாத வகையில் அறுக்கப்பட வேண்டும் என்பதே முக்கியம் என்றார்!

[ம—032]

அமெரிக்காவில் நேருள இந்தியாவில் எம் ஜி ஆர் பாணியில் தைவானில் நடிகையாக இருந்து அரசியலுக்கு வந்திருப்பவர் ஹு சுஹுசியாவோ டான்.

30 வயதுடைய இந்த கவர்ச்சித் தாரகை கடந்த டிசம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார்.

நட்சத்திரங்களுக்கு சுதந்திரம், சுற்றாடல் விழிப்புணர்வு போன்ற கோஷங்களை முன் வைத்து போட்டியிட்ட இவரால் வெற்றிபெற முடியவில்லை.

இப்போது இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது: குற்றச் சாட்டு என்ன தெரியுமா? ஆண், பெண் உறவை அப்பட்டமாக சித்திரிக்கும் விடியோ படத்தில் நடித்ததன் மூலம் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டார் என்பதே அதுவாகும்.

தேர்தல் பிரசாரத்தின் போது ஆளும் கட்சியை தாக்கியதற்காக அரசு தன்னைப் பழிவாங்கப் பார்ப்பதாக டான் கூறுகிறார்.

ஆளும் கோமின்டால் கட்சிக் கொடியுடன் மார்புக் கச்சையில்லாமல் தோன்றி அந்தக் கட்சித் தலைவர்களை அவர் ஆத்திரமூட்டச் செய்திருந்தார்.

ஒரு தடவை குப்பை மேட்டு பகுதி ஒன்றில் நிர்வாண ஓட்டம் நடத்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டில் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் இவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

(ம—து)

# நிர்வாண போஸ் பாடலுக்கு தடை

உலகப் புகழ்பெற்ற பாடகர் சுப்பர் ஸ்டார் மைக்கல் ஜாக்சனின் மூத்த சகோதரி லாடோயா ஜாக்சன். 32 வயதுடைய இவரும் ஒரு பாடகி. அண்மையில் மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ஒரு கலை நிகழ்ச்சியில் இவர் குழுவும் கலந்து கொள்வதாக இருந்தது.

ஆனால் கடைசி நிமிடத்தில் அதற்கு தடை விதிக்கப்பட்டது, இதற்கான காரணத்தை மலேஷிய கலாசார உல்லாசப் பயணத்துறை அமைச்சுப் பேச்சாளரான முக்தார் அப்துல்லா வெளியிட்டார்.

ஆண்களை கிளுகிளுக்க வைக்கும் அமெரிக்க சஞ்சிகை "பிளேபோய்" உள்ளூர் கலாசார ஒழுக்கத்திற்கு முரணான வகையில் கடந்த வருடம் இந்தச் சஞ்சிகைக்கு லாடோயா நிர்வாணமாக போஸ் கொடுத்திருந்தார், இந்த விவரம் தெரிய வந்ததாலேயே அந்த இசைக் குழுவுக்குத் தடை விதிக்கப்பட்டது.

(ம—து)

## பலே திருடன்

இத்தாலிய திருடன் ஒருவன் தங்கச் சங்கிலி ஒன்றை அபேஸ் செய்ய முயன்ற போது பொலீஸாரின் பார்வையில் பட்டு விட்டான்— உடனே அப் பலே திருடன் என்ன செய்தான் தெரியுமா?

300 கிராம் எடை கொண்ட சங்கிலியை லபக்கென வாயில் போட்டு விழுங்கி விட்டான்! ஆனாலும் பொலீஸார் இந்நபரை நழுவ விட்டு விடாமல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று சங்கிலியை வெளிக்கொணர்ந்து அதைக் கைப்பற்றினர்!

சத்திர சிகிச்சை எதுவும் செய்யாமல் கொஞ்சம் முரட்டுத்தனமாகவே தங்கச் சங்கிலியை வயிற்றை விட்டு வெளியேறச் செய்ததால் திருடனுக்கு உட்சிராய்ப்புகள் ஏற்பட்டு விட்டன! இதனால் பத்து நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து விட்டுத்தான் சிறைக்குச் சென்றான் திருடன்!

[ம—032]

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் குடும்பத்துக்கும் புற்று நோய்க்கும் இடையே நெருங்கிய சம்பந்தம் உண்டு! இந்நோய் கார்ட்டர் குடும்பத்தினரைத் தொடர்ந்து பலியெடுத்து வருகிறது!

சில வாரங்களுக்கு முன்னர் தான் ஜிம்மி கார்ட்டரின் கடைசித் தங்கையான 63 வயது குளோரியா கார்ட்டர் கணைய புற்று நோயால் மரணமடைந்தார்!

கார்ட்டரின் தந்தை ஜேம்ஸ் ஏர்ல் கார்ட்டர் தனது 50 ஆவது வயதில் புற்றுநோய் கண்டு மரணமுற்றார்— ஜிம்மி கார்ட்டரின் தாயார் லில்லியன் கார்ட்டர் கணைய புற்றுநோய் கண்டு 1983 ஆம் ஆண்டு மரணமடைந்தார்!

ஜிம்மி கார்ட்டரின் மற்றுமொரு சகோதரியான ருத்தும் புற்றுநோய் காரணமாகவே தன் 54 ஆவது வயதில் காலமானார்!

சகோதரர் பில்லி கார்ட்டர் தன் 51 ஆவது வயதில் புற்று நோய் கண்டு 1988 ஆம் ஆண்டு மறைந்தார்!

இப்படி பல கார்ட்டர்களை விழுங்கி விட்டது இந்தப் பொல்லாத நோய்!

[ம—032]